ஆலயத்தின் ஆசீர்வாதங்கள்



ப. சாம்ஜெபத்துரை

69
69
69

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆலயத்தின் ஆசீர்வாதங்கள்!

(BLESSING FROM THE CHURCH)

R. Yesuprasad
83 (2) pullamma Block
Sriramapuram
Bangalore.

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற் பதிப்பு : மார்ச் 1991
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 211

அச்சிட்டோர்:-
ஓரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

அர்ப்பணம்

என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கே இந்நூலை அர்ப்பணிக்கிறேன். அவருடைய கிருபையினாலே அவர் எழுப்பித் தந்த ஆயிரமாயிரமான அன்பு உள்ளங்களினாலேயே இந்த புத்தகம் வெளிடப் படலாயிற்று.

துதி கனம் மகிமை யாவும் ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய என் இயேசு கிறிஸ்துவுக்கே உரித்தாவதாக.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	எங்கே சந்திக்கலாம்?	5
2	ஆலயத்தின் ஆசீர்வாதங்கள்!	16
3.	ஆலயமும் ஆராதனையும்!	21
4.	ஆலயமும் ஆலோசனையும்!	31
5.	ஆலயமும் உபதேசமும்!	38
6.	ஆலயத்தின் நன்மைகள்!	42
7.	ஆலயமும் பிரச்சனைகளின் தீர்வும்!	46
8.	கர்த்தருடைய குடும்பம்!	50
9.	ஆலயம் கட்டப்பட வேண்டும்!	56

அத்தியாயம் 1

எங்கே சந்திக்கலாம்?

''நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும்'' (யோபு 23:3)

அவரை நாம் எங்கே சந்திக்கலாம்? நாம் எங்கே சந்தித்து அவரோடு மனம் திறந்து பேசலாம்? எங்கே அவருடைய பொன் முகத்தை கண்டு நம் கவலைகள் நீங்கி மகிழ்ச்சியடையலாம்? எங்கே போய் அவருடைய பாதங்களை தரிசித்து என் இருதயத்தையெல்லாம் அவருடைய சமுகத்திலே ஊற்றி விடலாம்? எங்கே அவரை சந்திக்கலாம்?

யோபு பக்தன் அவரை காண வேண்டுமென்று ஏங்கினார். நான் அவரை சந்தித்தால், ''அவர் ஆசனத்திற்கு முன்பாக வந்து சேர்ந்து, என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய் வைத்து, காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்'' என்று குறிப்பிடுகிறார் (யோபு 23:4).

யோபு பக்தனுடைய உள்ளத்திலே உள்ள ஒரு ஏக்கம் நிறைந்த தாகம் இந்த வசனத்திலே வெளியாகிறது. என்னை சிருஷ்டித்த என் ராஜாவை நான் எங்கே சந்திப்பது? என்னுடைய பிரச்சனைகளுக்கெல்லாம் ஒரு முடிவை உண்டாக்குகிற ஜீவனுள்ள தேவனை நான எங்கே போய் காண்பது? அதற்குரிய இடம் எது? அவர் எழுந்தருளுகிற ஸ்தலம் எது? என்று அவருடைய உள்ளம் ஏங்கி புலம்பினது

தேவபிள்ளையே, பிரச்சனைகளும் பாடுகளும் துயரங் நிறைந்த இந்த உலகத்தில் ஆறுதலின் இடத்தை தேடி உலகம் அங்கலாய்க்கிறது. எங்கே சென்று நிம்மதி பெறலாம் என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள். தங்களுடைய கண்ணீரைத் துடைக்கக்கூடிய கர்த்தரின் சமுகத்தையும்

பிரசன்னத்தையும் அவர்கள் ஏக்கத்தோடு எதிர்பார்க்கிறார்கள்.

இதை எழுதிக்கொண்டிருக்கும்போது ஒரு அருமையான சகோதரன் என்னைக் காணும்படி வந்தார். அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவி வகிக்கிறவர் அவர் அவர் மிகுந்த பாரத்தோடு என்னைப் பார்த்து, "இனம் புரியாத ஒரு பயம் என்னை எப்போதும் வாட்டுகிறது. வியாதிகள் வந்துவிடுமோ என்கிற பயம் இருக்கிறது. உள்ளத்தில் எப்போதும் கலக்கமும், துயரமும் என்னை சூழ்ந்து, எதிர்காலத்தைக் குறித்த வேதனையை உருவாக்குகிறது. மனதில் எப்போதும் ஒரு சோர்பு, தொய்வு, இனம்புரியாத ஒரு நடுக்கம் என்னை ஆக்கிரமித்து இரவு பகலாய் வாட்டுகிறது.

எங்கே சென்று யாரை சந்தித்து இவைகளிலிருந்து விடுதலை பெறுவது என்று எனக்கு தெரியவில்லை. ஒரு பெரிய மனோதத்துவ டாக்டரிடம் சென்று என்னுடைய பிரச்சனைகளையெல்லாம் சொன்னேன்.

அந்த மனோதத்துவ டாக்டர் என்னிடத்தில் பல கேள்வி கேட்டார். அதில் ஒரு கேள்வி நீங்கள் எப்பொழுதாகிலும் தற்கொலை செய்ய எண்ணியது உண்டா என்றார். அவர் அப்படி கேட்ட நாள் முதற்கொண்டு மரண பயமும் என்னை சேர்த்து பிடித்துக்கொண்டது. அது வரை தற்கொலையைக் குறித்து நான் எண்ணியதில்லை. ஆனால் அந்த மனோதத்துவ டாக்டரைப் பார்த்தபிறகு என் உள்ளம் தற்கொலையை பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறது. என்ன செய்வது என்று தெரியவில்லையே? எங்கே செல்வது என்று தெரியவில்லையே" என்று அங்கலாய்த்தார்.

அவர் சொன்னதைத் தொடர்ந்து இன்னொரு சகோதரன் வந்தார். "ஐயா, என்னுடைய வீடு நரகமாய் இருக்கிறது. என மகன் புத்திக்கோளாறினால் பயங்கரமான

காரியங்களை செய்கிறான். திடீரென்று கெரசினை ஊற்றி எதிலாவது தீ வைத்து விடுகிறான். மரங்களை வெட்டி வீழ்த்துகிறான். துணிமணிகளை எடுத்து கொளுத்துகிறான். பல மந்திரவாதிகளிடம் கொண்டு சென்றுவிட்டோம். ஆயிரக்கணக்கில் பணம் செலவளித்து விட்டோம். என் மனைவிக்கும் எனக்கும் ஒரே சண்டையும் சச்சரவுமாய் இருக்கிறது. குடும்பத்தில் எந்த நிம்மதியும் இல்லை. சந்தோஷமும் இல்லை. நான் எங்கே சென்று ஆறுதல் பெறுவது?''

ஒவ்வொரு நாளும் என்னை நேரில் சந்திக்கிறவர்களும் கடிதங்களின் மூலமாக பிரச்சனைகளை எழுதுகிறவர்களும் அவர்களுடைய இருதயத்தை ஊற்றி, எப்போது எனக்கு விடிவு காலம் உண்டு? எப்போது என்னுடைய கண்ணீர் துடைக்கப்படும்? நான் தேவனை எங்கே சந்திக்கலாம் என்று அங்கலாய்க்கிறார்கள்.

எண்பது கோடி மக்கள் நிறைந்த பெரிய தேசத்தில், ஜனங்களுக்கு எண்பது ஆயிரம் கோடி பிரச்சனைகள் இருக்கிறது கள்ளங்கபடில்லாத ஏழை மக்கள் உண்டு. வலது கைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் தெரியாத பாமர மக்கள் உண்டு. படிப்பறிவில்லாத பேதை மக்களும் உண்டு. அவர்கள் இருளிலே புழுவைப்போல நெளிந்து கண்ணீரோடும் பிரச்சனையோடும் தவித்து எங்கே வெளிச்சம் என்று எதிர்பார்க்கிறார்கள்.

தங்களை சிருஷ்டித்த தேவன் யார் என்று தெரியவில்லை. தங்களை தேடி வந்த இரட்சகர் யார் என்று தெரியவில்லை. தங்களுக்காக ஜீவனைக் கொடுத்து தங்கள் ஆத்துமாவுக்காக விலைக்கிரயம் செலுத்தியிருக்கிறவரை கண்டு கொள்ள முடியவில்லை.

நம் தேச மக்கள் தங்களுக்கு ஒரு நல்ல மேய்ப்பன் இருக்கிறார், ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கிறவர் இருக்கிறார் என்று அறியாமல் பல புண்ணிய ஸ்தலங்களுக்கு

ஓடிச்சென்று, மெய் தேவனை எங்கே கண்டு சந்திக்கலாம் என்று அறிந்தால் நலமாய் இருக்குமே என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையை அறிந்துகொள்ளும்படியான ஏக்கம் ஜனங்களுடைய உள்ளத்திலே இருக்கிறது. சத்தியத்தை அறிந்து கொள்ளும்படி அவர்கள் வாஞ்சையாய் இருக்கிறார்கள். மெய் வழியிலே செல்வதற்கு அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாகவே விளங்குகிறார்கள். அவரை எங்கே சந்திக்கலாம்?

சிலர் கடவுளை சந்திக்க எண்ணி குடும்பத்தை விட்டு விட்டு, கோத்திரத்தை விட்டுவிட்டு, பிள்ளைகளை விட்டு விட்டு, ஏதோ இமயமலை பகுதியிலே ஒரு குகையிலே தங்கி துறவறம் பூண்டு கடினமான தவமிருந்து அப்படியாவது மெய் தேவனை அறியலாமா என்று முயற்சித்து பார்க்கிறார்கள். அவரை நாம் எங்கே கண்டு சந்திப்பது?

சாது சுந்தர்சிங் வாழ்க்கையிலே இப்படிப்பட்ட ஒரு கேள்வி இருந்தது. ஒரு சீக்கியக் குடும்பத்திலே பிறந்த அவர் பள்ளிக்கூடத்திலே படிக்கும்போது இந்திய தேசத்தின் பண்பாட்டின்படி பல தெய்வங்களை வழிபட்டு வந்தார். ஆனால் அவருடைய உள்ளமோ ஏதோ ஒன்றுக்காக, இனம்புரியாத ஒரு மெய்ப்பொருளுக்காக, ஒரு பரமகுருவுக்காக ஏக்கம் கொண்டிருந்தது.

ஒரு நாள் அவருடைய பாடசாலையிலே சில கிறிஸ்தவ மிஷனரிமார் வந்து புதிய ஏற்பாட்டை விநியோகித்தார்கள் ஆனால் அவருக்கோ அந்தப் புத்தகங்களின்மேல் தாங்கொண்ணா வெறுப்பு! கோபமாய் அதை கிழித்து தீயிலே போட்டு கொளுத்தினார். இந்திய தேசத்திலே ஏராளமாய் தெய்வங்கள் இருக்கும்போது ஏன் இந்த புதிய ஏற்பாட்டை வாசிக்க வேண்டும்? என் தேசத்தில் தத்துவங்கள் இல்லையா? வேதங்கள் இல்லையா? சன்மார்க்

போதனைகள் இல்லையா? என்று சொல்லி கோபத்துடன் சென்றுவிட்டார்.

ஆனால் அந்த நாள் முதற்கொண்டு அவருடைய உள்ளம் மன அமைதியை இழந்தது. சமாதானத்தை இழந்தது. தான் ஆராதிப்பது பல தெய்வங்களாய் இருந்தாலும் அவைகளுக்கு அப்பால் ஒரு வல்லமை, ஒரு சக்தி இருக்கிறது என்பதை அவர் உணர்ந்தார். உண்மையான தேவன் ஒருவர் உண்டு என்பதை அவருடைய உள்ளம் பறைசாற்ற ஆரம்பித்தது.

அந்த உண்மையான தெய்வத்தை தேடிக் கண்டு பிடிக்க உள்ளத்தில் ஒரு திட்டமான தீர்மானம் எடுத்தார். வீட்டைவிட்டு புறப்பட்டு பல புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்றார். பல துறவிகள், யோகிகளை சந்தித்தார். பல ரிஷிகளோடு தங்கியிருந்து தன் இருதயத்திலுள்ள கேள்விகளையெல்லாம் அவர்களிடம் கேட்டுக்கொண்டேயிருந்தார். எந்த கேள்விக்கும் அவருக்கு பதில் கிடைக்கவில்லை.

துக்கமடைந்தவராய் இறைவனை எங்கே சந்திப்பது என்ற கேள்விக்கு விடை இல்லாதவராய் துயரத்தோடு அவருடைய வீட்டிற்கு திரும்பி வந்தார்.

அங்கே கடைசியாக ஒரு தீர்மானம் எடுத்தார். நாளை காலை ஐந்து மணிக்குள் என்னை சிருஷ்டித்தவரை சந்திக்காவிட்டால் நான் தற்கொலை செய்துகொள்வேன் என்று முடிவெடுத்தார். அவர் சீக்கிய குடும்பத்தில் பிறந்ததினாலே தான் எடுத்த முடிவை அப்படியே நிறைவேற்ற உறுதியும் கொண்டிருந்தார். அன்று இரவு படுப்பதற்கு முன்பு ஒரு பிரார்த்தனையை எல்லா தேவர்களுக்கும் பொதுவாக ஏறெடுத்தார். எந்த தெய்வம் உண்மையான தெய்வமோ அந்த தெய்வம் இன்று தன்னை எனக்கு வெளிப்படுத்தட்டும். அப்படி வெளிப்படுத்தும் பட்சத்தில் அந்த தெய்வத்தை நான் முழு இருதயத்தோடு ஏற்றுக்

கொள்ளுவேன். வெளிப்படுத்தாத பட்சத்தில் நான் தற் கொலை செய்துகொள்வேன் என்றார்.

நிம்மதியாய் படுத்து தூங்கினார். திடீரென்று அதி காலை 4 மணிக்கு அவருடைய அறை முழுவதும் ஜோதி பிரகாசம் நிரம்பியிருக்கிறதினாலே கண் விழித்தார்.

அவருக்கு அந்த வெளிச்சம் எங்கேயிருந்து வருகிறது என்று தெரியவில்லை. தான் சந்திக்க விரும்பின ஆண்டவர் தன்னை சந்திக்க வந்திருக்கிறதையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

நேரே அறையைவிட்டு வெளியே ஓடி, வராந்தாவில் படுத்திருந்த வேலைக்காரனை தட்டி எழுப்பினார். ''வா எழுந்திரு, என் அறைக்குள் ஒரே வெளிச்சமாய் இருக் கிறது. என்ன நேரிட்டது?'' என்று கேட்டார்.

வேலைக்காரனுக்கோ ஒன்றும் புரியவில்லை. எந்த விளக்கும் இல்லாமல் அந்த வெளிச்சம் வருவதை இருவரும் கவனித்தார்கள். காரணத்தை புரிந்துகொள்ள முடிய வில்லை. வேலைக்காரன் திரும்பவும் போய் படுத்துக் கொண்டான்.

அப்போது திடீரென்று கர்த்தர் சாது சுந்தர்சிங் கோடு பேசினார். முதலில் சொன்ன வார்த்தை இதுதான். ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்'' என்றார் அவர்.

அதைத் தொடர்ந்து கிறிஸ்து அவரிடத்தில் பேசி, ''நீ யாரை சந்திக்க வேண்டுமென்று விரும்பினாயோ அந்த தேவனாகிய கர்த்தராகிய நான் உன்னை சந்திக்க வந்திருக் கிறேன். நானே உன் தாயின் வயிற்றிலே உன்னை உருவாக் கினவர். நானே உலகங்களை சிருஷ்டித்தவர். நானே உனக் காக சிலுவையில் யாவையும் செய்து முடித்தவர்'' என்று உணர்த்தினார்.

அப்பொழுதே சாது சுந்தர்சிங் முழங்காற்படியிட்டு கர்த்தருடைய வார்த்தைக்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்து கிறிஸ்துவை தெய்வமாக ஏற்றுக்கொண்டார்.

யார் யாருடைய உள்ளங்கள் தேவனைக் காணவேண்டுமென்று வாஞ்சிக்கிறதோ அவர்களுக்கு கர்த்தர் தம்மை வெளிப்படுத்த ஆவலுள்ளவராய் இருக்கிறார். சகோதரனே சகோதரியே, இந்த புத்தகத்தை நீங்கள் வாசித்துக் கொண்டு இருக்கும்போதே உங்களுடைய உள்ளத்தில் தேவனை சந்திக்க வேண்டுமே, அவரோடு பேசி உறவாட வேண்டுமே என்கிற அளவில்லாத ஆர்வம் எழும்பினால், அவர் நிச்சயமாகவே உங்களை சந்தித்து உங்களோடுகூட உறவாடுவார். உங்களை ஆசீர்வதித்து புதிய கிருபையினால் உங்களை நிரப்புவார். ஆவியாய் இருக்கிற கர்த்தர் இப்பொழுதே உங்கள் அருகில் நின்று உங்களையே கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை மறந்துபோகாதிருங்கள்.

கர்த்தர் ஆதாம் ஏவாளை சிருஷ்டித்தார். தம்முடைய சாயலிலே, தம்முடைய ரூபத்தின்படியே சிருஷ்டித்தார். தம்முடைய சுவாசத்தையே ஊதி அவர்களை ஜீவாத்துமாவாக மாற்றினார். தம்முடைய ஆவியை அவர்களுக்குள் வைத்தார்.

மனுஷனுக்குள் அந்த தேவனுடைய ஆவி இருந்ததினாலே அவர்களுடைய உள்ளம் தேவனை சந்திக்க ஏங்கினது. அவரோடுகூட உறவாட தாகம் கொண்டது. கர்த்தரும் அதை அறிந்தார். அவரும் மனுஷரோடு உறவாட தீர்மானித்தார்

ஒரு பகலின் குளிர்ச்சியான வேளையிலே கர்த்தர் ஆதாம் ஏவாளை தேடி ஏதேன் தோட்டத்திற்குள் இறங்கி வந்தார். அவர்களுடைய அருகிலே வந்து அவர்களோடு கூட பேசி உலாவினார்.

அந்த நாளிலிருந்து தேவாதி தேவன் மனுமக்களோடே சஞ்சரித்து மனுமக்களோடே ஐக்கியங்கொள்ள தீர்மானித்தார். ஆனால் பாவமோ தடுப்புச் சுவராய் நின்று மனுஷனுக்கும் தேவனுக்கும் இடையில் பிரிவினையை உண்டாக்கினது.

மனுஷனுங்கூட கர்த்தருடைய ஆளுகைக்கு தன்னை பூரணமாய் ஒப்புக்கொடுக்க விரும்பாமல் சுய ஆளுகையை விரும்பினான். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் சாத்தானுடைய வார்த்தைக்கே கீழ்ப்படிந்ததினாலே மனுஷனுடைய ஆளுகையும் அதிகாரமும் அவனை விட்டு எடுபட்டு சாத்தானிடம் சென்றது; அவன் இப்பிரபஞ்சத்தின் லோகாதிபதியானான்.

அந்த சூழ்நிலையிலுங்கூட யார் யாருடைய உள்ளங்கள் தேவனுடைய பிரசன்னத்திற்காக ஏங்கினதோ, யார் யார் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்று விரும்பி எதிர்பார்த்தார்களோ அவர்களுக்கெல்லாம் தன்னை வெளிப்படுத்தி உறவாட சித்தமானார்.

ஆபிரகாம் அவருக்கு பலி செலுத்தின வேளையிலெல்லாம் பலியின் அக்கினிஜுவாலையிலே அவர் இறங்கி வந்து ஆபிரகாமோடுகூட மனந்திறந்து பேசினார்.

இன்னும் காலங்கள் கடந்து சென்றது. கர்த்தருக்கோ மனுஷரோடுகூட தங்கி இருக்க வேண்டுமென்ற வாஞ்சை அதிகமாக உண்டானது. ஆகவே மோசேயைப் பார்த்து, நான் என் ஜனங்களோடு தங்கியிருக்க வேண்டும். அதற்காக அவர்கள் மத்தியிலே ஒரு கூடாரத்தை அமைப்பாயாக. ஒரு ஆசரிப்பு கூடாரத்தை எனக்காக உண்டாக்குவாயாக அங்கே இருந்து நான் என் ஜனங்களோடே பேச வேண்டும் என்றார்.

அப்படியே ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை சந்தித்தார். அவர்களோடுகூட பேசினார்.

சாலொமோன் கர்த்தருக்கென்று மகிமையான தேவாலயத்தை கட்டினபோது கர்த்தர் மிகுந்த சந்தோஷத்தோடு தமது ஜனத்தை சந்திக்க இறங்கி வந்தார். தம்முடைய மகிமையினால் அந்த ஆலயம் முழுவதையும் நிரப்பினார்.

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் வந்தபோது அவர் கர்த்தருடைய ஆலயத்திலே உலாவினார் என்று வேதம் சொல்லுகிறது. யோவான் 10:23 -ஐ வாசித்துப் பாருங்கள். ''இயேசு தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக்கொண்டிருந்தார்.''

ஆம், ஆண்டவர் ஆலயத்தில் உலாவுகிறவர். ஆலயத்திலே தம்முடைய ஜனங்கள் மத்தியிலே அசைவாடுகிறவர். ஜனங்களுடைய தேவைகளை சந்தித்து அளவில்லாமல் அற்புதங்களை செய்கிறவர்.

ஏதேன் தோட்டத்திலே உலாவின அதே ஆண்டவர் ஆலயத்திலும் உலாவுகிறார். உலாவுதல் என்றால் என்ன? ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு செல்வது. பின்பு அதே மூலைக்கு நடந்து வருவது. இப்படியாக மீண்டும், மீண்டும் நடப்பதே உலாவுவதாகும்.

கர்த்தர் தேவனுடைய ஆலயத்திலே உலாவுகிறார் என்று வேதம் சொல்லுகிறது. அவர் உலாவும்போது அவருடைய கண்கள் எல்லோரையும் நோக்கிப் பார்க்கிறது. அவருடைய காதுகள் ஒவ்வொருவருடைய ஜெபத்தையும் கேட்கிறது.

கர்த்தர் உலாவும்போது ஏற்படும் ஆசீர்வாதங்கள் மிகுந்த மேன்மையானவை. நாம் இரண்டு பேராவது மூன்று பேராவது தேவனுடைய சமுகத்திலே கூடி வரும்போதெல்லாம் ஆண்டவர் அங்கே இறங்கி வந்து உலாவுகிறார். நீங்கள் கூடி ஜெபிக்கிற இடமே ஆலயமாக மாறுகிறது! ஒருவேளை நீங்கள் ஏழையாய் இருக்கலாம். படிப்

பறிவில்லாதவர்களாய் இருக்கலாம். திக்கற்றவர்களாய் இருக்கலாம். ஆனால் நீங்கள் கர்த்தருடைய நாமத்தினால் கூடி வரும்போது கர்த்தர் அங்கே இறங்கி வருகிறார். நீங்கள் ஆராதிக்கிற அந்த ஸ்தலம் ஒரு ஓலைக் குடிசையாய் இருந்தாலும் கர்த்தர் அங்கே இறங்கி உலாவுவார். அவர் பட்சபாதமுள்ளவர் அல்ல. பெரிய ஆலயமாகிய கட்டிடத்தை விரும்பி எளிய குடிசையை அலட்சியப் படுத்துகிறவர் அல்ல.

இன்னொரு முக்கியமான வேதசத்தியத்தையும் மறந்து போகாதிருங்கள். நீங்களே கர்த்தருடைய ஆலயமாய் இருக்கிறீர்கள். கர்த்தருடைய பிரசன்னம் உங்களுடைய உள்ளத்தில் அசைவாடுகிறது என்பதை மறந்துபோகாதிருங்கள். I கொரி 3:16, I கொரி 6:19-யை வாசித்துப் பாருங்கள். இந்த வசனங்களிலே, நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும் தேவ ஆவியானவர் உங்களுக்குள் வாசமாய் இருக்கிறார் என்பதையும் கண்டு கொள்ளலாம்.

கர்த்தர் உங்களுடைய உள்ளத்திலே இறங்கி உலாவ வேண்டுமென்றால் உங்களுடைய உள்ளம் அதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். ஒரு முறை கர்த்தர் ஒரு தேவாலயத்திற்கு சென்றபோது அவரால் சந்தோஷமாய் அங்கே இறங்கி உலாவ முடியவில்லை. காரணம், அந்த ஆலயம் முழுவதும் வியாபாரிகளாலும் கொள்ளுகிறவர்களாலும் விற்கிறவர்களாலும் நிரம்பி இருந்தது.

வேதம் சொல்லுகிறது, ''இயேசு தேவாலயத்திலே பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து: என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படும் என்று எழுதியிருக்கிறது என்றார்'' (மத் 21:12).

கர்த்தருடைய ஆலயம் ஜெபவீடாய் இருக்குமென்றால் கர்த்தர் மகிழ்ச்சியோடே அங்கே இறங்கி உலாவுவார்.

ஆனால் அந்த ஆலயம் வியாபாரிகளால் தீட்டுப்பட்டிருக்கும் என்றால் கர்த்தர் அதை சவுக்கினால் சுத்திகரிக்க வேண்டியது வந்துவிடும்.

தேவபிள்ளையே, ஆலயத்தின் ஆசீர்வாதத்தில் முக்கியமான ஆசீர்வாதம் கர்த்தர் இறங்கி உலாவுகிற ஆசீர்வாதம்தான். கர்த்தர் உன்னை சந்திக்கிற ஒரு ஆசீர்வாதம்தான். அந்த ஆசீர்வாதத்தை நீ எப்போதும் காத்துக்கொள்ள உன் உள்ளத்தில் இடைவிடாமல் ஜெபம் எழும்பிக்கொண்டே இருக்க வேண்டும். ஜெபிக்கிற உன் இருதயத்தில் தேவனுடைய மகிமை இறங்கும். தேவனுடைய பிரசன்னம் நிரம்பியிருக்கும் கர்த்தரும் இறங்கி உலாவுவார்.

நீ கர்த்தரோடு இருப்பதும், கர்த்தர் உன்னோடு இருப்பதும் எத்தனை பெரிய ஆசீர்வாதம்! இதுவே கர்த்தருடைய ஆலயம் தரும் ஆசீர்வாதமாகும்.

ஆலயத்தின் ஆசீர்வாதங்கள்!

"ஆலயம்" என்று சொன்ன உடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிற ஸ்தலம் என்கிற எண்ணம் நமக்குள்ளே வருகிறது. நம்மை அறியாமலேயே ஒரு பய பக்தி, ஒரு தெய்வ பயம் நம் உள்ளத்தை ஆட்கொள்ளுகிறது. ஆலயம் என்ற உடனே தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு தேவனை சந்திக்கும் இனிய நினைவுகள் வருகிறது.

கர்த்தருடைய ஆலயம் என்ற உடனே அங்கே நடக்கிற ஆராதனை, பாடுகிற பாடல்கள், பிரசங்கிக்கிற போதகங்கள், இன்னும் பாடல் குழுவினர் போன்றவர்களின் காட்சி நம்முடைய மனக்கண்களை பரவசப்படுத்துகிறது.

தமிழ் மக்கள் ஆலயத்தை முக்கியப்படுத்துகிறவர்கள். "ஆலயம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று அறிவுரையும் கூறுவார்கள். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது பழமொழி.

நம் தேசத்திலே மக்கள் இயற்கையாகவே கடவுள் பக்தி மிகுந்தவர்கள். அவர்கள் எந்த மதத்தினராய் இருந்தாலும் தாங்கள் வசிக்கிற இடத்திலே தங்களுக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டி இறைவனைத் தொழுது கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

ஆலயம் என்று சொல்லும்போதே அதை இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். காணப்படுகிற ஆலயமும் உண்டு, காணப்படாத ஆலயமும் உண்டு. ஒன்று, எழுத்தின்படி உள்ள தேவனுடைய ஆலயம். அது நாம் காணக்கூடிய வகையிலே கல்லினாலும் மண்ணினாலும் கட்டப்பட்ட ஒரு கட்டிடமாகும். சில வேளைகளில் அவை

பார்ப்பதற்கு அழகாயுள்ள ஊசி கோபுரங்களாகவும், கெம்பீரமான தூண்களாகவும், அழகிய வேலை அமைப்பு களும் உன்னதமான கட்டிடமாகவும் இருக்கலாம். அல்லது குடிசையான ஆராதனைக் கூடமாகவும் இருக்கலாம்.

அதே நேரத்தில் காணக்கூடாத ஆலயமும் இருக்கிறது. அது அதரிசனமான கிறிஸ்துவின் சரீரம். அது பரலோகத்தில் பேர் எழுதப்பட்டு இருக்கிற சர்வ சங்கமாகிய சபை. உலகமெங்கும் உள்ள பரிசுத்தவான்களை ஆவியினாலே ஒன்றாய் கூட்டி இணைத்து இருக்கக்கூடிய தேவனுடைய மாளிகை!

காணப்படக்கூடிய உலகப்பிரகாரமான ஆலயத்திலே சேரவேண்டுமென்றால் ஒரு வேளை அதற்கு விண்ணப்ப படிவத்தை நிரப்பிக்கொடுக்க வேண்டியதிருக்கும். மாதந்தோறும் சந்தா பணம் அல்லது தசமபாக காணிக்கைகளை செலுத்த வேண்டியதிருக்கும். இன்னும் ஏராளமான விதிமுறைகள், சட்டதிட்டங்கள் உண்டு. அதை நிறைவேற்றினால்தான் கல்யாணம், கல்லறை போன்றவற்றிற்கு இடம் கிடைக்கும்!

ஆனால் காணப்படாத தேவனுடைய ஆலயத்தில் நாம் அங்கத்தினராக சேரவேண்டுமென்றால் ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களறக் கழுவப்பட்டிருக்கவேண்டும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்று நாம் I யோவான் 1:7-ல் வாசிக்கிறோம்.

அப்படி ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால் நாம் கழுவப்படும்போது பரலோகத்திலிருக்கிற ஜீவ புஸ்தகத்திலும் நம்முடைய பெயர் எழுதப்படுகிறது. அது நமக்கு எவ்வளவு சந்தோஷத்தை தருகிறது (லூக் 10:12). இந்த ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் முதலிலே பரலோகத்தில் பிரவேசிப்பார்

கள் (வெளி 20:15). அவர்களுக்கு மரணத்தைப் பற்றிய பயம் இல்லை.

பூமிக்குரிய ஆலயமானது பல சபைப் பிரிவுகளாலும், பல உபதேச பிரிவுகளாலும் வேறுபட்டுக் கிடக்கிறது. தமிழ்நாட்டில் ஏறக்குறைய ஏழாயிரத்திற்கும் மேலான சபைகள் இருக்கின்றன. அதே நேரத்தில் காணப்படாத சபை ஒன்றே ஒன்றுதான். அந்த சபையை இயக்குபவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவரே அந்த சபையை தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்டார் (அப் 20:28).

நாம் காணக்கூடிய பூமியிலுள்ள திருச்சபை அல்லது மற்ற சபைகளுக்கு போதகர் தலைமை ஏற்று முன் நின்று நடத்துகிறார். இங்கே சபையை நாம் மேய்ப்பர்களாகவும் ஆடுகளாகவும் பார்க்கிறோம்.

ஆனால் காணப்படாத தெய்வீகமான சபையிலே கிறிஸ்து தலையாக விளங்குகிறார். சபை சரீரமாக விளங்குகிறது. கிறிஸ்து ஆத்தும மணவாளனாக விளங்குகிறார். சபை மணவாட்டி சபை என்று அழைக்கப்படுகிறது.

காணப்படக்கூடிய கட்டிடமான ஆலயம் கல்லினாலும், சிமெண்டினாலும், சாந்தினாலும் கட்டப்பட்டு எழும்புகிறது. ஆனால் காணப்படாத சபை பற்றி எபே 2:22-லே நாம் வாசிக்கும்போது, நாம் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறோம் என்பதை நாம் மறந்துபோய்விடக்கூடாது.

ஆலயத்தைக் கட்டுங்கள்:-

தேவனுடைய பிள்ளைகள் ஆலயத்தை கட்டி எழுப்ப வேண்டியது மிகவும் அவசியம். விசுவாசிகளை கட்டி எழுப்ப வேண்டியது மிகவும் அவசியம். ஆவிக்குரிய ஜீவியத்தை கட்டி எழுப்ப வேண்டியது மிகவும் அவசியம்.

ஆகாய் தீர்க்கதரிசி சொல்லுகிறார் ''நீங்கள் மலையின் மேல் ஏறிப்போய் மரங்களை வெட்டிக் கொண்டு வந்து ஆலயத்தைக் கட்டுங்கள்'' என்கிறார். ஆம், ஆலயத்தைக் கட்டுங்கள் என்று வேதம் ஆலோசனை சொல்லுகிறது.

ஆலயத்தை எப்படி கட்டி எழுப்புவது? ஆண்டவருக்கு எப்படிப்பட்ட ஆலயத்தை நம்மால் கட்டி உருவாக்க முடியும்? என்பதை சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் ''வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது?'' (ஏசாயா 66:1, 2).

இயற்கையாகவே மனுஷன் ஒரு இடத்தைத் தெரிந்து கொண்டு அதை புனிதமாக்கி அதிலே இறைவனை வழிபட விரும்புகிறான். ஆகவே தன்னால் முடிந்த வரை அதிலே ஒரு ஆலயத்தைக் கட்ட தீர்மானிக்கிறான். ஆனால் கர்த்தர் கேட்கிறார், நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது?

ஒருவேளை ஒரு பணக்காரன், ஆண்டவரே உமக்காக உயர்ந்து வளர்ந்து நிற்கிற ஒரு ஆலயத்தை முன்னூறு அடி உயரத்தில் கட்ட விரும்புகிறேன் என்று சொல்லக் கூடும். ஆனால் ஏழை மனுஷனோ, தென்னை ஓலைக் கீற்றினால் ஒரு சிறிய ஜெப வீட்டைக் கட்ட விரும்புகிறேன் என்று சொல்லக்கூடும்.

சரி. யார் எவ்வளவு பெரியதாய் கட்டினாலும் காணக் கூடாத இறைவனை அங்கே கொண்டு வந்து வைக்க முடியுமா? வானம் எனக்குச் சிங்காசனம் பூமி எனக்குப் பாதபடி என்று சொல்லுகிற ஒரு பெரிய மகிமையின் தேவனை ராஜாதி ராஜாவை அங்கே கொண்டு வந்து இருத்தி வைக்க முடியுமா?

நம்முடைய ஆண்டவர் கல்லினுலே கட்டப்பட்ட ஆல யத்திலே வாசம் செய்கிறவர் இல்லை என்பதை அப் 17:24-லே நாம் வாசிக்கிறோம்.

அப்படியானல் ஆண்டவருக்கு எப்படி ஆலயத்தைக் கட்டுவது என்று நீங்கள் வினவக்கூடும். அந்தக் கேள்விக்கு பதிலை I கொரி 3:16-லே நாம் வாசிக்கிறோம். நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறுரென்றும் அறியாதிருக்கிறீர்களா? என்று அந்த வசனம் நம்மைப் பார்த்து கேட்கிறது.

நாம் உலகப்பிரகாரமான ஆலயத்திலே சென்று மற்ற விசுவாசிகளோடுகூட கர்த்தரை தொழுது ஆராதித்தாலும் கூட கர்த்தர் வாசம் பண்ண விரும்புகிற ஆலயமோ நம்மு டைய இருதயமாகவே இருக்கிறது. நாம் கட்டி எழுப்ப வேண்டிய ஆலயமானது நம் ஆவிக்குரிய வாழ்க்கையா கவே இருக்கிறது.

காணப்படுகிற ஆலயத்திலும் நாம் அங்கத்தினராக இருந்து கர்த்தரை தொழுதுகொண்டு தேவனுடைய பிள்ளைகளோடுகூட சேர்ந்து தேவனை மகிமைப்படுத்த வேண்டும். மாத்திரமல்ல, காணப்படாத ஆலயமாகிய நம் உள்ளத்திலே கர்த்தர் வாசம் செய்யும்படி நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் கட்டி எழுப்பப்பட வேண்டும். அப்பொழுதுதான் தேவனுடைய ஆலயத்தின் எல்லா ஆசீர்வாதங்களையும் நாம் சம்பூரணமாக ருசிக்க முடியும்!

அத்தியாயம் 3

ஆலயமும் ஆராதனையும்!

''இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள்''
(ஏசாயா 43:21).

தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய ஆலயத்திற்கு வருவதின் நோக்கம் என்ன? முதலாவது நோக்கம், நாம் தேவனை தேவ ஆலயத்தில் சந்திக்க வேண்டும் என்பதாகும்.

ஆலய ஆராதனையிலே கூடி வந்திருக்கிற ஒவ்வொருவர் மேலும் அவருக்கு ஒரு எதிர்பார்ப்பு உண்டு. என்ன எதிர்பார்ப்பு அது? ''என் ஜனங்கள் என்னை துதிக்க வேண்டும்'' என்கிற எதிர்பார்ப்பே அது. அவர்களை எனக்கென்று ஏற்படுத்ினேன். இந்த பூச்சக்கரத்தில் எனக்கென்று தெரிந்துகொண்டு அவர்களை வேறு பிரித்தேன். அவர்கள் என் ஜனங்கள். அவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள்.

நம்முடைய ஆராதனையிலே தேவன் மிகவும் பிரியமாயிருக்கிறார் என்பதை நாம் மறந்துபோய் விடக்கூடாது. இஸ்ரவேல் ஜனங்களை பார்வோனின் கைக்கு கர்த்தர் விடுவிக்கும்போது இரண்டு காரியங்களை அவர்களிடத்திலே எதிர்பார்த்தார். ஒன்று அவர்கள் கர்த்தருக்கென்று ஆராதனைச் செய்ய வேண்டும். இரண்டாவது எதிர்பார்ப்பு, கர்த்தருக்கென்று பலி செலுத்த வேண்டும் (யாத் 12:25).

கர்த்தர் ஆராதனைக்காக சில மாதங்களைக் குறிப்பிட்டு நாட்களையும் முன் குறித்தார். அந்த நாட்களிலே அவர்கள் தேவ சமுகத்திலே கூடி வந்து கர்த்தரை ஆராதித்து, துதித்து, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

நெகேமியா கர்த்தருக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டினபோது அதிலே துதிப்பதற்கென்று இரண்டு கூட்டத்தாரை வைத்திருந்தாராம். நெகேமியா 12:40-லே நாம் அதை வாசிக்கலாம். துதி செய்கிற இரண்டு கூட்டத்தாரும் தேவனுடைய ஆலயத்திலே வந்திருந்தார்கள் என்று நெகேமியா எழுதுகிறார். அது என்ன இரண்டு கூட்டத்தார்?

ஒரு கூட்டத்தார் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறார்கள். அடுத்த கூட்டத்தார் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். ஸ்தோத்தரிப்பதற்கு ஒரு கூட்டம். அவர் நல்லவர் வல்லவர் போதுமானவர் என்று சொல்லி அவரை மகிமைப்படுத்துவதற்கு இன்னொருக் கூட்டம்.

ஸ்தோத்தரிப்பது என்பது கர்த்தர் நம்முடைய வாழ்க்கையிலே தனிப்பட்ட முறையில், சிறு வயது முதல் இந்நாள் வரை செய்த நன்மைகளுக்கு நன்றி செலுத்துவது ஆகும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பாசத்தோடு அன்போடு தேவன் செய்த ஒவ்வொரு நன்மைக்காகவும் கர்த்தரை போற்றி புகழவேண்டும்.

அதே நேரத்தில் துதிப்பது என்பது கர்த்தருடைய மகிமை, அவருடைய மகத்துவம், அவருடைய மேன்மைகள், அவருடைய கிருபைகள், அவருடைய ஐசுவரியம், அவருடைய காருண்யம், அவருடைய மனதுருக்கம் எல்லாவற்றையும் சொல்லிச்சொல்லி ஆண்டவரை போற்றிக் கொண்டேயிருப்பதாகும்.

நெகேமியா தேவனுடைய ஆலயத்திலே துதியும் ஸ்தோத்திரமும் ஏறெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இரண்டு கூட்டத்தாரை நியமித்து கர்த்தரை மகிமைப்படுத்திக்கொண்டிருந்தார். நம்முடைய ஆலயத்திலே நாம் பாடுகிறோம், துதிக்கிறோம். முக்கிய நோக்கம் அந்த ஆராதனையிலே கர்த்தர்வந்து உலாவ வேண்டும், அசைவாடவேண்டும் என்பதுதான்.

பாடலும் ஒரு துதியின் ஆராதனை தான்! நாம் பாடும் போது நம்முடைய இருதயமும் கர்த்தர் மீட்டுக்கொண்ட உதடுகளும் அவரில் கெம்பீரித்து மகிழுகிறது. நாம் பாடும்போது கர்த்தருடைய உள்ளமெல்லாம் பரவசமடைகிறது.

வேடிக்கையான கதை ஒன்று உண்டு. ஒருமுறை ஒரு சபையின் போதகர் தரிசனத்திலே பரலோகத்திற்கு சென்றாராம். அது ஒரு ஞாயிற்றுகிழமை ஆனதினால் உலகமெங்கும் சபைகளிலே ஆராதனை நடந்துகொண்டிருந்தது. கர்த்தர் அவரைப் பார்த்து, உன்னுடைய ஆலய ஆராதனையை நீ காண வேண்டுமென்று விரும்புகிறாயா? என்று கேட்டார். போதகரும் சரி என்று தலையை அசைத்தார்.

பரலோகத்திலிருந்து பூமியிலே அவருடைய சபை ஆராதனையைக் கர்த்தர் காண்பித்தார். அந்த நேரம் பாடலின் நேரம். எல்லாரும் பாடுகிறார்கள் ஆனால் யாருடைய சத்தமும் வெளிவரவில்லை வாய்கள் அசைக்கப்படுகிற வெறும் காட்சிதான் தெரிகிறது அதே நேரத்தில் ஒரு வாலிபன் பாடுகிற சத்தம் மாத்திரம் கணீரென்று பரலோகத்தில் ஒலித்தது.

அந்த போதகர் கர்த்தரைப் பார்த்து எல்லோரும் பாடினபோதிலும் ஒரே ஒரு வாலிபன் குரல் மாத்திரம் பரலோகத்திலே தொனிக்கிறதே, என்ன காரணம் என்று விசாரித்தார். அதற்கு கர்த்தர் மற்றவர்கள் எல்லாரும் உதடுகளிலிருந்து கடமைக்காக பாடுகிறார்கள். சிலர் தன்னுடைய சத்தம் கேட்க வேண்டுமென்று உயர்த்தி பாடுகிறார்கள். இதெல்லாம் அவர்களுடைய தொண்டையிலிருந்து வெளிவருகிற சத்தமாகும். மாம்சத்தில் பாடுவது பரலோகத்தை எட்டுவது இல்லை

ஆனால் அந்த வாலிபனைப் பார், அவன் புதிதாய் இரட்சிக்கப்பட்டிருக்கிறான். ஆவியோடும் உண்மையோ

டும் கர்த்தரை ஆராதிக்க கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்திருக்கிறான். அவன் தன்னுடைய முழு ஆத்துமாவோடும், முழு அன்போடும் அன்புகூர்ந்து பாடுகிறபடியினால் அந்த குரல் பரலோகத்திலே கேட்கிறது என்றார் அவர்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள ஆசீர்வாதங்களில் ஒன்று நாம் அவரைப் பாடி துதித்து மகிமைப்படுத்த வேண்டும் என்பதுதான். பரவசமடைந்து களிகூர வேண்டும் என்பதுதான். கர்த்தரைத் துதித்து ஆராதனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடுகூட வருவோம் என்றால் நிச்சயமாகவே கர்த்தர் நம்முடைய உள்ளத்தை பரவசப்படுத்தி ஆசீர்வதித்து அனுப்புவார்.

ஒரு வல்லமையான சத்தியத்தை நாம் மறந்து விடவே கூடாது. நம்முடைய கர்த்தர் துதிகளின் மத்தியிலே வாசம் செய்கிறவர். ஆம் நாம் துதிக்கும்போது அவர் நம் மத்தியில் வாசம் செய்யும்படியாய் இறங்கி வருவார். அவர் இறங்கி வரும்போது நம்மை ஆசீர்வதிக்காமல் கடந்து செல்லவே மாட்டார்.

ஒரு முறை நான் இலங்கையில் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தேன். அந்த ஆலயத்திலேயிருந்த அநேக வாலிபர்கள் இரவு நேரத்தில் என்னிடத்தில் வந்து, உங்களோடு கூட நீண்ட நேரம் ஜெபிக்க விருப்பப்படுகிறோம் என்று கேட்டார்கள். நானும் அந்த வாலிபர்களோடு இணைந்து ஜெபிக்க விரும்பினேன்.

சரி என்று ஒரு நாள் இரவு பத்து மணிக்கு எங்களுடைய ஜெபக் கூட்டத்தை ஆரம்பித்தோம். முதலில் அவர்களை சுத்திகரிப்புக்குள்ளாக நீண்ட நேரம் நடத்தினேன். கல்வாரி சிலுவையை நோக்கிப் பார்க்கச் செய்து பாவங்களுக்காக கழுவப்பட வேண்டியதின் அவசியத்தை விளக்கினேன். கிறிஸ்துவின் காயங்களை நோக்கிப் பார்த்து கல்வாரியின் இரத்தம் ஒவ்வொருவருடைய உள்ளத்

லும் விழுந்து அவர்களை கழுவி சுத்திகரிக்கும்படி மன்றாடி னேன். அவர்களும் பாவங்களை அறிக்கை செய்து மனஸ்தாபத்தோடும் கண்ணீரோடும் தேவனண்டை திரும்பினார்கள்.

அதைத் தொடர்ந்து, நாங்கள் ஆராதிக்க ஆரம்பித்தோம். கர்த்தரை துதித்து மகிழ ஆரம்பித்தோம்.

நான் அவர்களைப் பார்த்து நாம் முழு இருதயத்திலிருந்து, உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆண்டவரை துதித்து நன்றியோடு ஒரு பாடலைப் பாடப்போகிறோம். ''ஸ்தோத்திரம் இயேசு நாதா! உமக்கென்றும் ஸ்தோத்திரம் இயேசு நாதா!'' என்ற பாடலை தெய்வீக அன்பினால் நிரம்பி இருதயத்தில் உணர்ந்து உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியோடுகூட பாடுவோம். பாடுவதற்கு முன்பாக எல்லாரும் கிறிஸ்துவினுடைய கரங்களை விசுவாசத்தினால் பிடித்துக் கொள்ளுங்கள். விசுவாசக் கண்களினால் ஆண்டவர் உங்களுக்கு முன்பாக நின்று கொண்டிருக்கிறதை கண்ணீரோடு அவருடைய பொன் முகத்தை நோக்கிப் பார்த்து அவரை உள்ளன்போடு நேசிப்பதாகச் சொல்லுங்கள் என்று சொன்னேன்.

பாடல் ஆரம்பித்தது, என் உள்ளம் கர்த்தர் மேல் உள்ள அன்பினால் பொங்க ஆரம்பித்தது. ஸ்தோத்திரம் இயேசு நாதா என்று சொல்லும்போதே என் கண்கள் ஆனந்தக் கண்ணீரை சொரிய ஆரம்பித்தது. ஒரு காலத்தில் பாவியாய், குடிகாரனாய், அருவருப்பாய் வழி நடந்து கொண்டிருந்த என்னையும் இயேசு நேசித்தாரே, என்னையும் தம்முடைய இரத்தத்தினாலே கழுவினாரே, தேவனுடைய பிள்ளைகளின் ஐக்கியத்தில் நிலை நிறுத்தினாரே என்று கர்த்தர் செய்த எல்லா நன்மைகளையும் எண்ணி எண்ணி ஸ்தோத்திரம் செலுத்த ஆரம்பித்தேன்.

பாடலோடு நான் ஒன்றாக கலந்ததை அறிந்தேன். பாடலும் நானும் ஒன்ருய் கர்த்தரோடு இணைந்ததை அறிந்தேன்.

கொஞ்ச நேரம் கழித்து அந்த பாடலை அந்நிய பாஷையிலே பாடினேன். அதன்பின்பு நடனமாடி கர்த்தரைத் துதித்து பாடிக் கொண்டேயிருந்தேன்.

அப்பொழுது திடீரென்று என்னிலே ஏதோ ஒன்று சம்பவிக்கிறதை உணர்ந்தேன். என்னுடைய சரீரத்தின் எடை நிமிடத்திற்கு நிமிடம் குறைந்தது. நூற்றுப் பத்து கிலோ எடையுள்ள என்னுடைய சரீரம் நூருகித் தொண்ணூருகி எண்பதாகி படிப் படியாய் பூஜ்ஜியத்தை நோக்கி இறங்கிக்கொண்டே வந்தது. என்னுடைய சரீரத்தின் பளுவை உணர முடியாத ஒரு சூனிய நிலைக்கு வந்த போது என்னுடைய ஆத்துமா மேகத்தில் பறப்பதைப் போல உணர்வு அடைந்தேன்.

அப்போஸ்தவனுகிய பவுல் ஆவிக்குள்ளாகி மூன்ரும் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்டதை அப்பொழுது தான் என்னுல் உணர்ந்துகொள்ள முடிந்தது.

ஸ்தோத்தரித்து, துதித்து, பாடிக்கொண்டிருந்த நான் கர்த்தருடைய கரம் பிடித்து உன்னதங்களிலே அவரோடு கூட உலாவுவதை உணர்ந்தேன். கர்த்தருடைய நாமத்தினிமித்தம் என்னுடைய உள்ளம் பொங்கிக்கொண்டேயிருந்தது. எத்தனை மணி நேரம் நடனமாடினேன், எத்தனை மணி நேரம் துதித்தேன், எத்தனை மணி நேரம் ஆவியிலே களிகூர்ந்துகொண்டிருந்தேன் என்று ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. வாலிபர்கள் மத்தியிலே கூட்டம் நடத்திக்கொண்டிருந்தேன என்ற உணர்வு என்னை விட்டு முற்றிலும் நீங்கிப்போயிற்று.

நேரம் கடந்து சென்று கொண்டேயிருந்தது. திடீரென்று ஒரு சத்தம் கேட்டு என்னுடைய கண்களை நான் திறந்து பார்த்தபோது, அப்போதுதான் அந்த

இடம் நான் கூட்டம் நடத்திக்கொண்டிருந்த ஆலயம் என்பதை உணர்ந்தேன். எனக்கு முன்பாக அந்த வாலிபர்கள் உட்கார்ந்திருக்கவில்லை. எங்கே போனார்கள் அவர்கள்? எல்லாரும் வீட்டிற்கு திரும்பிவிட்டார்களா? என்று எண்ணின வேளையில் அந்த வாலிபர்கள் எல்லாம் ஆங்காங்கே ஆலயத்தின் ஒவ்வொரு மூலைகளில் நின்று ஆவியினால் நிரம்பி நடனமாடிக்கொண்டிருக்கிறதைக் கண்டேன்.

என்னை நிரப்பின அதே ஆவியானவர் எல்லாரையும் நிரப்பி ஆவிக்குள்ளாக்கினபடியினால் எல்லாரும் கர்த்தருக்குள் களிகூர்ந்துகொண்டிருந்தார்கள். மெய் மறந்து, ஸ்தோத்திரம் இயேசு நாதா என்று சொல்லி பாடிக்கொண்டிருந்தார்கள். ஆம், எல்லாரையும் ஆண்டவர் ஒன்றுபோல நிரப்பினார். ஒரே ஆவியினால் தாகம் தீர்த்தார். உன்னதத்திற்குள்ளாக அழைத்துச் சென்று பரலோகத்தின் உச்சிதங்களினால் எங்களை அபிஷேகித்தார்.

தேவபிள்ளையே, ஆலயத்திற்கு வருவதென்பது ஏதோ ஒரு கடமைக்காக அல்ல. மற்றவர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள் என்பதற்காக அல்ல நாம் தேவனுடைய ஆலயத்தின் சம்பூரணத்தினால் நிரப்பப்பட வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார்.

மரியாளைப் பாருங்கள். அவள் ஆண்டவருடைய பாதபடிக்கு வந்தாள். ஆண்டவருடைய பிரசன்னம் அவளை நிரப்பினது. அவளுடைய உள்ளம் பொங்கினபடியினால் ஒரு வார்த்தைகூட பேச அவளால் முடியவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அந்த கண்ணீரினால் கர்த்தருடைய பாதத்தை நனைத்துக்கொண்டிருந்தாள்.

வேதத்தை வாசித்துப் பாருங்கள். அவள் ஒரு வார்த்தைகூட பேசினதாக வேதத்தில் காணவில்லை. உள்ளம் பொங்கி கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறதையும், அந்த

கண்ணீரினால் கர்த்தருடைய பாதத்தை நனைத்துக்கொண்டிருக்கிறதையும், அந்த கண்ணீரை தன்னுடைய தலை மயிரினால் துடைத்துக் கொண்டிருக்கிறதையும் நாம் காணலாம். ஒரு அமைதலான ஆராதனை! அமைதியாய் அவருக்கு ஸ்தோத்திரமும், துதியும் செலுத்தும் மேன்மையான ஆராதனை. உள்ளம் பேசியது, உதடுகள் பேசவில்லை

உள்ளம் தேவ மகிமையால் நிரம்பி பொங்கும்போது வார்த்தைகளுக்கு அவசியமேயில்லை கர்த்தர் முகத்தைப் பார்க்கிறவர் அல்ல. அவர் இருதயத்தைப் பார்க்கிறவர். இருதயத்தின் ஆழத்திலிருந்து கர்த்தர்மேல் அன்புகூரும் போது உள்ளம் பொங்கத்தான் செய்யும்.

அப்படியே தேவ சமுகத்தில் கர்த்தரை துதித்து ஸ்தோத்தரித்து மகிமைப்படுத்த வரும்போது ஒவ்வொரு ஜெபமும் நம்முடைய உள்ளத்தின் ஆழத்தில், இருதயத்தின் அடித்தளத்தில் இருந்த எழும்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அப்படி துதிக்கும் துதி நமக்கு பிரயோஜனமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

சத்தமாய் துதிக்கிற நேரங்களும் உண்டு. அமைதியாய் தேவ சமுகத்திலே இருதயத்தை நொறுக்கி நன்றியுள்ள இருதயத்தோடு கண்ணீர் சிந்தும் ஆராதனையும் உண்டு.

ஆலயத்திலே கூடி வரும்போது கைகளைத் தட்டி மேளதாளம், வாத்திய கருவிகளோடு தேவனை துதிக்கிற அதே வேளையில்தானே மவுனமாய் ஆண்டவர் செய்த எல்லா நன்மைகளையும் நினைவுகூர்ந்து ஆண்டவரைத் துதிக்கவும் நாம் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

தாவீது ராஜாவின் அனுபவத்தைப் பாருங்கள். அவருடைய உள்ளம் ஸ்தோத்திரத்தினால் நிறைந்தது மட்டுமல்ல, அவர் தேவனை தியானிக்கவும் ஆரம்பித்தார். தான் அனுபவித்ததை 39-ம் சங்கீதத்தில் எழுதும்போது, "நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும்

பேசாமல் அமர்ந்திருந்தேன்; என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது என்று குறிப்பிடுகிறார் (சங் 39:2,3).

சற்று சிந்தித்துப் பாருங்கள். நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது என்று குறிப்பிடுகிறார். தேவனை தியானித்தார். ஆண்டவருடைய மகிமைகளை மிகுதியாய் தியானித்தார். சிறு வயதிலிருந்து கர்த்தர் அவருக்கு செய்த நன்மைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தார்.

அநேகர் ஜெபம் என்று சொன்னால் தங்களுக்கு அது வேண்டும் இது வேண்டும் என்ற விண்ணப்பங்களை அடுக்கடுக்காய் தேவ சமுகத்திலே கொண்டுபோய் அடுக்குவதே ஜெபம் என்று எண்ணுகிறார்கள். ஜெபத்தின் ஒரு பகுதி அதுவாய் இருந்தபோதிலும் அதுவே முழுமையான ஜெபமாகிவிடாது.

அது வேண்டும் இது வேண்டும் என்று கர்த்தரிடத்தில் கேட்பதற்கு முன்னதாகவே அவரை நேசித்து அன்பு செலுத்தி அவருடைய பொன் முகத்தை நோக்கிப் பார்த்து, நீர்தான் எனக்கு வேண்டும் ஆண்டவரே என்று சொல்லுங்கள். உம் மேலேயே என் அன்பையெல்லாம் வைத்திருக்கிறேன் என்று மனந்திறந்து சொல்லுங்கள். உம்மைப்போல் யாருண்டு அப்பா என்று சொல்லி அவருடைய பாதங்களை பற்றிக்கொள்ளுங்கள். உலகத்தின் எல்லா மேன்மைகளைப் பார்க்கிலும், ஐசுவரியங்களைப் பார்க்கிலும் நான் உம்மையே அதிகமாய் நேசிக்கிறேன் என்ற பொருத்தனையோடுகூட அவருடைய பாதங்களை பற்றிக்கொள்ளுங்கள்.

அவரை அல்லாமல் பெரிய பாக்கியம் என்ன உண்டு? அவரைப் போல நேசிக்க வேறு யார் உண்டு? அவரைப் போல பலமும், பராக்கிரமமும், மகிமையும், மகத்துவமும், கிருபையும் நிறைந்த அன்பின் இரட்சகர் யார் உண்டு?

ஆலயத்திற்கு, அவருடைய சன்னிதானத்திற்கு வரும் போது அவருடைய மகிமையின் பிரசன்னம் உங்களை

சூழ்ந்துகொள்ளட்டும். அவருடைய அன்பின் கரங்கள் உங்களை அரவணைத்துக்கொள்ளட்டும்.

ஆண்டவரே நான் உம்மிலே நிரம்பியிருக்க வேண்டுமே! நீர் என்னுள்ளே வாசமாய் இருக்க வேண்டுமே! உம்முடைய மகிமையின் சாயலிலே நான் மறுரூபமாகி விட வேண்டுமே! உம்முடைய கிருபைக்குள்ளாக பூரணமாய் வழிநடத்தப்பட வேண்டுமே என்று சொல்லி உங்களுடைய முழு இருதயத்தோடும், உங்களுடைய முழு பலத்தோடும் அவரை துதிக்க ஆரம்பித்து விடுங்கள்.

ஆலயத்திலே நாம் கூடி வருகிறதன் முக்கிய நோக்கம், அவருக்கு ஆராதனை செய்ய வேண்டும் என்பதுதான்!

அத்தியாயம் 4

ஆலயமும் ஆலோசனையும்!

நாம் தேவனுடைய ஆலயத்திற்கு வருவதன் முதல் நோக்கம் நாம் அவரை சந்திப்பதாகும். இரண்டாவதாக, அவரை ஆராதிப்பதற்காக நாம் ஆலயத்திற்கு வருகிறோம். மூன்றாவதாக, ஆலயத்திலே கர்த்தருடைய ஆலோசனையை பெற்றுக்கொள்ளுகிறோம். ஆம், ஆலயத்தில்தான் கர்த்தருடைய வழிநடத்துதலை அறிய முடிகிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு தாம் வைத்திருக்கிற சித்தத்தை தெளிவாய் வெளிப்படுத்துகிறார்.

தேவாலயத்திற்கு வரும்போது ஒரு எதிர்பார்ப்போடு கூட, கர்த்தர் என்னிடத்தில் பேச வேண்டுமே என்ற ஜெபத்தோடுகூட வருவோமென்றால் கர்த்தர் நம்மோடு கூட பேசுவார். வேத வசனங்களின் மூலமாய் பேசுவார். பாடல்களின் மூலமாய் பேசுவார். கர்த்தருடைய ஊழியக்காரர்களின் மூலமாய் பேசுவார்.

நமது ஆண்டவருடைய பெயர்களிலே ஒரு பெயர் ''ஆலோசனைக் கர்த்தர்'' என்பதாகும். நான் உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்று அவர் வாக்களித்திருக்கிறாரே! ஆண்டவரே, நீர் என்னோடுகூட பேசும். உம்முடைய ஆலோசனைகளை எனக்கு சொல்லித் தாரும். நான் நடக்க வேண்டிய வழிகளை போதியும் என்று நீங்கள் ஆலயத்திற்கு வரும்போதெல்லாம் ஜெபிப்பீர்களென்றால் கர்த்தர் நிச்சயமாகவே ஆராதனையின் ஒவ்வொரு பகுதியின் மூலமாகவும் உங்களோடுகூட பேச வல்லமையுள்ளவராய் இருக்கிறார். அவர் உங்களுக்கு ஏற்ற செய்தியை கர்த்தருடைய ஊழியக்காரர்களுடைய உதடுகளிலே வைத்தருளுவார்.

நீங்கள் ஒருவேளை உங்களுடைய சுய சிந்தனைகளின் மேல் சாய்ந்து, உங்களுடைய சுய ஞானத்தை நம்பிக்

கொண்டிருப்பீர்களானுல் அந்த சுய ஞானம் வேதனையான முடிவுக்குள் உங்களை வழிநடத்திவிடும். அதே நேரத்தில் நீங்கள் உங்களுடைய வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து அவருடைய சித்தத்திற்கு உங்களை அர்ப்பணிப்பீர்களானுல் ஆண்டவர் உங்களை அருமையாய் மேன்மையாய் நடத்துவார். உங்களுடைய வழிகளைப்பார்க்கிலும் கர்த்தருடைய வழிகள் ஆயிரம் மடங்கு மேன்மையுள்ளதாய் இருக்கிறது. மனுஷனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழிகள் உண்டு; அவைகள் மரண வழிகள் என்று வேதம் எச்சரிக்கிறது.

ஆகவே தேவனுடைய பிள்ளையே, நீ உன்னுடைய சுய சித்தத்தை நிறைவேற்றுமல் உன்னுடைய மனமும் மாம்சமும் போனபடி வழிநடத்தாமல், கர்த்தருடைய வழிநடத்துதலுக்கு உன்னை ஒப்புக்கொடுத்து ஜெபத்தோடுகூட கர்த்தருடைய ஆலயத்திற்கு செல்வாயென்றுல் கர்த்தர் நிச்சயமாகவே தம்முடைய ஆலோசனைகளை உனக்கு தெரியப்படுத்துவார்.

அநேகர் ஜெபத்தோடு ஆலயத்திற்கு வராததினுலே கர்த்தருடைய வழிநடத்துதலை பெற முடியாமல் வெறுமையாய் எழும்பிப்போகிறுர்கள். இன்னும் சிலரோ அந்தப் போதகர் எனக்கு என்ன பேசிவிட முடியும்? இந்த ஊழியக்காரர் எனக்கு என்ன அறிவுரை சொல்லிவிட முடியும் என்று இறுமாப்புக் கொண்டிருக்கிறதினுலே கர்த்தர் தம்முடைய வழியை போதிக்க முடியாமல் போகிறது.

கர்த்தர் யாரைக் கொண்டாகிலும் பேசுவார் என்பதை நாம் மறந்துபோய்விடக்கூடாது. தம்முடைய தீர்க்கதரிசியாகிய பிலேயாமுக்கு கழுதையைக்கொண்டுகூட பேச அவர் வல்லமையுள்ளவராய் இருந்தார். ஆகவே பிரசங்கிக்கிறவர் யார் என்பதைக்குறித்து எண்ணுமல் கர்த்தர் என்னோடு என்ன பேசுகிறுர் என்கிற எதிர்பார்ப்போடு

இருக்கும்போது கர்த்தர் நிச்சயமாகவே உங்களோடுகூட பேசுவார்.

நான் முன்பின் அறியாத பல ஆலயங்களுக்கு சென்றிருந்தபோதிலும் அங்கே கர்த்தர் பல கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மூலம் என்னோடு பேசியதை என்னால் மறக்க இயலாது.

ஒரு முறை என் வாழ்க்கையில் பயங்கரமான புயல் வீசியது. எந்த வழியில் செல்வது? எந்த பாதையை தெரிந்துகொள்வது என்று அறியாத பல போராட்டங்களோடு மனம் சோர்ந்த நிலையில் ஒரு ஆலயத்தின் பின் பகுதியில் அமர்ந்திருந்தேன்.

நான் வந்து அமர்ந்ததையும் யாரும் கவனிக்கவில்லை. அந்த நேரம் பிரசங்கித்துக்கொண்டிருந்த ஒரு இளம் பிரசங்கியார் நேராக என்னைப் பார்த்து தன்னுடைய கைகளை நீட்டி, ''முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளை சிந்திக்கவேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; வனாந்தரத்திலே வழியையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்'' என்று சொல்லி அவர் மூலமாய் கர்த்தர் பேசினார்

(ஏசா 43:18,19).

அந்த வார்த்தைகள் என்னை நோக்கி ஒரு அக்கினி அம்பைப்போல வந்தது. என் உள்ளம் முழுவதையும் பரவசப்படுத்தியது. கர்த்தர் எனக்கு ஒரு புதிய காரியத்தை செய்யப்போகிறார் என்று உடனே உணர்ந்தேன். அந்த வசனம் கர்த்தர் என்னோடுகூட பேசுகிற ஒரு தீர்க்கதரிசன வசனம் என்பதை உணர்ந்தேன். அந்த வசனத்தின் மேலே அளவில்லாத விசுவாசம் என்னில் உருவெடுத்தது.

ஆம், ஆண்டவரே! இன்றைக்கு நீர் ஒரு புதிய காரியத்தை செய்கிறபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்று சொல்லி துதிக்க ஆரம்பித்தேன். அப்பொழுது

தானே என்னுடைய கவலைகள், பாரங்கள், துயரங்களெல்லாம் ஓடி மறைந்தன. ஆண்டவர் என்னோடுகூட பேசிய படியே அன்றைக்கே பெரிய காரியத்தை என் வாழ்க்கையில் செய்தார். என்னுடைய பிரச்சனைகளுக்கெல்லாம் ஒரு தீர்வைக் கொடுத்தார்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, நீ கர்த்தருடைய ஆலயத்திற்கு தேவ சமுகத்திற்கு ஓடி வரும்போதெல்லாம் கர்த்தர் உனக்கு அருமையான ஆலோசனைகளை தருகிறார் என்பதை மறந்துபோகாதே. உன்னோடுகூட பேச அவர் விரும்புகிறார் என்பதை மறந்துபோகாதே. நீ நடக்க வேண்டிய வழிகளை அவர் உனக்கு போதிப்பார் என்பதை மறந்துபோகாதே.

ஏசாயாவைப் பாருங்கள். ஏசாயா ஒரு நாள் கர்த்தருடைய ஆலயத்திற்கு ஓடி வந்தார். காரணம், உள்ளத்திலே ஒரு பாரம் இருந்தது. இந்த உசியா மரணமடைந்துவிட்டாரே! இனி யார் இஸ்ரவேலரை அரசாட்சி செய்யப் போகிறார்கள்? இனி யார் தேவ ஜனத்தை வழிநடத்தப் போகிறார்கள்? இந்த இஸ்ரவேலருக்கு தேவன் கொடுக்கிற மேய்ப்பன் யார்? என்பதை அறிய ஜெபத்தோடுகூட கர்த்தருடைய ஆலயத்திலே வந்து உட்கார்ந்திருந்தார்.

ஏசாயா அந்த ஆலயத்திற்கு வருவதற்கு முன்பாகவே கர்த்தர் அங்கே உயரமும் உன்னதமுமான சிங்காசனத்திலே வீற்றிருக்கிறவராய் காட்சியளித்தார். அல்லேலூயா! கர்த்தருடைய வஸ்திரதொங்கல் தேவாலயம் முழுவதையும் நிரப்பியிருந்தது.

உசியாவுக்கு பிறகு எந்த ராஜா அரசாளப் போகிறார் என்ற கேள்விக்கு கர்த்தர் அருமையாய் பதிலளித்தார். ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிற கர்த்தரே அரசாளப்போகிறார் என்பதே அந்தக் கேள்விக்கு பதில். உலக ராஜாவின் சிங்காசனத்தை அவர் காண்பிக்கவில்லை. ராஜாதி ராஜாவாகிய தன்னு

டைய சிங்காசனத்தையே ஏசாயாவுக்கு காண்பித்தார். ஏசாயாவின் உள்ளம் எவ்வளவு சந்தோஷப்பட்டு களிகூர்ந்திருக்கும்!

அந்த ராஜாவின் வஸ்திர தொங்கல் அந்த தேவாலயம் முழுவதையும் நிரப்பியிருந்தது. ஆலயத்தில் தொங்குகிற அந்த வஸ்திரத்தின் தொங்கலானது ஆளுகையின் சின்னம் மட்டுமல்ல, அற்புதத்தின் சின்னம். ஆலயத்திற்கு வருகிற ஒவ்வொருவரையும் குணமாக்கும்படி கர்த்தர் ஆவலுள்ளவராய் இருக்கிறார்.

ஏசாயா தேவாலயத்திலிருந்தபோது எத்தனை ஆழமான பாடத்தை கற்றுக்கொண்டார், எத்தனை மேன்மையான தரிசனமடைந்தார் என்பதையெல்லாம் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நாம் கர்த்தரை துதித்து ஆராதிக்கும்போது கர்த்தர் அங்கே சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவராய் அமர்கிறார். நம்முடைய ஆராதனை நேரங்களில் தேவதூதர்கள், கேருபீன்கள், சேராபீன்கள் எல்லோரும் கலந்துகொள்ள வருகிறார்கள்.

உசியா இருந்த அந்த ஆலயத்திலே சேராபீன்களெல்லாம் கர்த்தரை துதிக்கும்போது சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த ஆராதனையின் சத்தத்தால் தேவாலயத்தின் நிலைக் கதவுகள் எல்லாம் அசைந்தன. ஆலயம் முழுவதையும் மகிமை நிரப்பிற்று.

புதிய ஏற்பாட்டிலே தேவனுடைய பிள்ளைகள் பாடி ஆராதிக்கிறார்கள். அவர்கள் பாடித் துதித்த இடம் அசைந்தது என்று வேதம் சொல்லுகிறது. அவர்கள் ஆராதித்த அந்த இடத்திற்கு உள்ளேயும் அந்த சந்தோஷத்தின் பிரதிபலிப்பு இருந்தது. சேராபீன்கள் துதிக்கும்போது ஆலயத்தின் நிலைக்கால்கள் அசைந்தன.

தேவ ஜனங்கள் ஆராதிக்கும்போது முழு இடமே அசை கிறது, ஆத்துமாக்கள் அசைகிறது. கடின உள்ளங்களும் அசையாத உள்ளங்களும் அசைகிறது.

ஒரு முறை ஒரு தேவாலயத்திலே ஜனங்கள் எல்லாரும் பாடி கர்த்தரை ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஆராதனையின் சத்தம் அதிகமாக வெளியே கேட்டது. அந்த சத்தத்தைக் கேட்ட ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் இது என்ன சத்தம் என்று சொல்லி கேட்பதற்காக மெது வாக உள்ளே வந்தார். அங்கே எல்லோரும் கர்த்தரைத் துதித்து பாடிக்கொண்டிருந்தார்கள்.

அவர் மெதுவாய் பின்னால் வந்து அமர்ந்தார். விசு வாசிகள் பாடப் பாட அவருடைய கால்கள் மெதுவாக தாளம் போட ஆரம்பித்தது இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர்கள் பாட்டினால் அதிகமாக இழுக்கப்பட்டார் தன்னை அறியாமலேயே கை தட்டிப் பாடினார்.

இன்னும் கொஞ்சநேரம் கழிந்தபிறகு பின் வரிசையில் உட்கார்ந்துகொண்டு இருக்க முடியவில்லை. சற்று முன் னால் வந்து கர்த்தரை துதித்துப் பாடினால் என்ன என்று எண்ணினார் அவர்.

அவர் முன் வரிசைக்கு வந்து அமர்ந்தபோது தேவ ஆவியானவர் திடீரென்று அவர்மேல் அளவில்லாமல் இறங்கினார். தேவ வல்லமை பரிபூரணமாய் அவரை ஆட் கொண்டது. முழங்காலில் நின்று குதித்து கைகளைத் தட்டி சத்தமிட்டு அந்நியபாஷையிலே பேச ஆரம்பித்துவிட் டார். அவருடைய பேண்ட் எல்லாம் தும்பு தும்பாக கிழிந்துபோனது. போலீஸ் யூனிபார்ம் எப்படியோ மாறிப் போனது. அந்த சிறு சபையின் ஆராதனையின் சத்தமும் ஆவியானவரின் கிரியையும் அன்று அவரை ஒரு பெரிய பரிசுத்தவானாய் மாற்றினது.

அருமையான தேவனுடைய பிள்ளையே, கர்த்தருடைய ஆலயத்திற்கு வரும்போது கர்த்தர் உன்னை நிரப்புகிறார், அபிஷேகிக்கிறார், பேசுகிறார், உறவாடுகிறார்.

ஏசாயாவை தம்முடைய ஆலயத்திலே சந்தித்து பெரிய தீர்க்கதரிசியாய் உயர்த்தினவர் உங்களையும் நிச்சயமாய் சந்தித்து உயர்த்துவார்.

அத்தியாயம் 5

ஆலயமும் உபதேசமும்!

"அவர் பகற்காலங்களில் தேவாலயத்திலே உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார்" (லூக் 21:37).

"நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தேன்" (மத் 26:55).

கர்த்தருடைய ஆலயத்திற்கு செல்லும்போது நமக்கு கிடைக்கிற ஒரு பெரிய ஆசீர்வாதம் கர்த்தருடைய உபதேசமாகும், கர்த்தருடைய போதனைகள் ஆகும்.

ஒரு மனுஷன் ஆவிக்குரிய ஜீவியத்திலே திடகாத்திரமாய் நிற்க வேண்டுமென்றால் அவனுக்கு போதனைகள் அவசியம். அநேகருக்கு போதனையும் தெரியவில்லை, உபதேசமும் தெரிவதில்லை. பெயருக்கு கிறிஸ்தவர்களாகவே வாழுகிறார்கள். அஸ்திபார உபதேசங்களும் உண்டு; பிரச்சனைகளிலிருந்து விடுதலை பெறக்கூடிய போதனைகளும் உண்டு. ஆவிக்குரிய ஜீவியத்திலே முன்னேறிச் செல்லக்கூடிய படிப்பினைகளும் உண்டு.

அப்.பவுலின் நிருபங்களையெல்லாம் வாசித்துப் பாருங்கள். எத்தனை அருமையான உபதேசங்களை கர்த்தர் அவர் மூலமாக கொடுத்திருக்கிறார் என்பதை நீங்கள் அறியலாம். அவை அனைத்தும் நம் ஒவ்வொருவருடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் பிரயோஜனமாக இருக்கிறது.

பல வேலைகளில் வேதத்தின் கருகலான சத்தியங்களை நாம் புரிந்துகொள்ள முடியாமல் தவிக்கிறோம். மறைபொருளான அநேக தீர்க்கதரிசனங்கள் நமக்கு புரியாமல் இருக்கின்றன கர்த்தருடைய ஆலயத்திலே கர்த்தருடைய தாசர்கள் தேவ வசனத்தை எடுத்து அதை விளக்கி

போதனை கொடுக்கும்போது அது நம்முடைய ஆத்துமா வுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது.

இன்றைக்கு ஆலயங்களின் நிலைமை என்ன? பெயரள வில் ஏராளமான ஆலயங்கள் இருக்கலாம். ஆனால் அங்கே உபதேசம் இருப்பதில்லை. அஸ்திபார உபதேசங் களில்லாமல் கிறிஸ்தவ வாழ்க்கை உறுதியாய் கிறிஸ்து வோடுகூட அஸ்திபாரமிடப்படுவதில்லை.

நான் ஐரோப்பிய தேசங்களுக்கு சென்றபோது அங்கே பெரிய பெரிய ஆலயங்களைப் பார்த்தேன். எவ்வளவோ கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆலயங்களை பார்த் தேன். எல்லாம் வெறுமையாய் கிடக்கிறது. ஒரு காலத்தில் நிரம்பியிருந்த அந்த ஆலயம் இப்போது கேட்பாரற்று அனாதையாய் கிடக்கிறது. ஜனங்கள் அங்கே வர பிரியப் படவில்லை. அது வெறும் கட்டிடமாய் நிற்கிறது. உபதேசம் இல்லாமல், போதனை இல்லாமல் பாழாய்ப் போனது. ஆனால் எந்த ஆலயத்தில் கிறிஸ்து இருக்கி றாரோ அந்த ஆலயத்தில் அற்புதங்கள் நடக்கும். கர்த்த ருடைய உபதேசங்கள் அங்கு கொடுக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நான் பல முறை ஊழியத்திற்கு போயிருக்கிறேன். பல சபைகள் எளிய சபை களாய் இருந்தாலும், கூரைகளின் கீழே ஆராதிக் கக்கூடிய இடமாக இருந்தாலும் உபதேசங்கள் அங்கே நிரம்பி காணப்படுகிறது. வேத வசனத்தின் வல்லுநர் களை அங்கே காணலாம்.

ஆதி திருச்சபையை நோக்கிப் பாருங்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலே உறுதியாய் தரித் திருக்கிறார்கள். அந்த சபையில் ஊழியர்கள் இருந்தார் கள்; ஊழியர்கள் வேத அறிவினால் நிரம்பியிருந்தார்கள். சபை மக்களுக்கு வேண்டிய உபதேசங்கள் ஏராளமாய், தாராளமாய் கொடுக்கப்பட்டது.

ஆசாரியனுடைய உதட்டிலே ஜனங்கள் அறிவை எதிர்பார்க்கிறார்கள். வேத அறிவை எதிர்பார்க்கிறார்கள், உபதேசங்களை எதிர்பார்க்கிறார்கள்

இயேசுகிறிஸ்து இந்த பூமியிலிருந்த நாட்களில் அவர் தன்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறார். நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தேன் என்று குறிப்பிடுகிறார்.

உபதேசம் என்பது ஏதோ ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் ஒரு மணி நேரம் வேண்டா வெறுப்போடு சாப்பிடுகிற கஷாயம் அல்ல. உபதேசம் ஒவ்வொரு நாளும் உட்கொள்ளக்கூடிய பஞ்சாமிருத டானிக் ஆகும்.

அநேக கிறிஸ்தவர்களுக்கு அடிப்படை உபதேசமே என்ன என்று தெரிவதில்லை. மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளையெல்லாம் அப்போஸ்தலனாகிய பவுல் அஸ்திபார உபதேசம் என்று குறிப்பிடுகிறார் (எபி 6:1,2).

தம் உபதேசங்களை திருச்சபைகளுக்கு கொடுத்தது மாத்திரமல்ல, திருச்சபையிலே எழும்பின கர்த்தருடைய ஊழியக்காரராகிய தீமோத்தேயுவும் தீத்துவும் அப்போஸ்தலனாகிய பவுலும் எழுதும்போது ஆரோக்கியமான உபதேசத்தை பேசும்படி கட்டளையிட்டார்

(தீத்து 2:1).

கொடுக்கப்படும் உபதேசமானாலும் போதகமானாலும் அது ஆரோக்கியமானதாய் விளங்க வேண்டும். ஆவிக்குரிய ஜீவியத்தில் ஊன்றி கட்டுகிறதாய் இருக்கவேண்டும். விசுவாசிகளுடைய ஜெப ஜீவியத்தை அது எழுப்பி கட்ட வேண்டும். பரிசுத்த ஜீவியத்தை கட்டி எழுப்ப வேண்டும். வெற்றி வாழ்க்கையை கட்டி எழுப்ப வேண்டும். விசுவாசத்தோடு முன்னேறிச் செல்ல ஊக்கப்படுத்த வேண்டும்.

அநேக சபைகளில் விசுவாசிகளுக்கு போதுமான உபதேசமும் போதனையும் கொடுக்கப்படாததினாலே அவர்கள் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டியதெல்லாம், வயிற்றுவலி நீங்க வேண்டும், காய்ச்சல் நிற்க வேண்டும், கடன் பிரச்சனை தீர வேண்டும். எந்த ஊழியர் வந்தாலும் ஓடி ஓடி போய் பரிதாபமாய் முழங்காற்படியிடுகிறார்கள். ஆனால் அவர்களே ஜெபித்து ஆவியிலே பெலன்கொண்டு அற்புதங்களை செய்ய முடிவதில்லை. பிரியப்படுவதும் இல்லை. குழந்தைகளாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு தாய்ப்பால்கூட ஜீரணமாகவில்லை.

இன்னும் சிலர் போதனைகளிலே பெலன்கொள்ளாமல் தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நான் பவுலைச் சேர்ந்தவன், நான் கேபாவைச் சேர்ந்தவன், நான் அப்பல்லோவைச் சேர்ந்தவன் என்று சொல்லுகிறார்கள்.

இவர்கள் ஆவிக்குரிய மார்க்கமாய் நடக்காமல் மாம்ஷீக மார்க்கமாய் உலகப்பிரகாரமான மார்க்கமாய் நடக்கிறார்கள்.

அன்று இயேசு ஆலயத்திலே போதனை கொடுத்ததைபோல இன்றைக்கும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மூலமாய் போதனை கொடுக்க ஆவலுள்ளவராய் இருக்கிறார். தேவபிள்ளையே, உபதேசத்தினாலே உன்னுடைய விசுவாசம் கட்டப்படுவது மாத்திரமல்ல, கிறிஸ்துவினுடைய வருகைக்கு நீ ஆயத்தப்பட வேண்டும். கிறிஸ்துவினுடைய சுபாவங்களையெல்லாம் நீ தரித்துக்கொள்ள வேண்டும். ஆராதனைக்கு செல்லும் ஆலயமானது உன்னை பரலோக பாக்கியத்திற்குள் வழிநடத்துகிறதாய் இருக்கட்டும்.

அத்தியாயம் 6

ஆலயத்தின் நன்மைகள்!

''உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்'' (சங் 65:4).

தாவீது அருமையாய் சொல்லுகிறார்! உமது ஆலயத்தின் சம்பூரணத்தினால் நான் திருப்தியாவேன். கர்த்தருடைய ஆலயத்திற்கு செல்லுவோம் வாருங்கள் என்று சொல்லும்போது தாவீதின் உள்ளத்தில் ஒரு பெரிய மகிழ்ச்சி. ஒரு பெரிய சந்தோஷம். ஆம், அங்கே நான் திருப்தியாக போஷிக்கப்படப் போகிறேன். என் தேவனுடைய வீடு சகல நன்மையினாலும் பரலோகத்தின் உச்சிதங்களினாலும் நிரம்பியிருக்கிறது. கன்மலையின் தேன் அங்கு உண்டு. பேரின்ப நதியினால் தாகம் தீர்க்கப்படுவேன். தாவீதினுடைய உள்ளம் ஆனந்த பரவசமடைகிறது.

தேவபிள்ளையே, ஆலயத்திற்கு செல்லும்போதெல்லாம் நன்மைகளை கூடை கூடையாக கர்த்தர் உனக்கு அள்ளித் தருவார் என்பதை மறந்துபோகாதே! நிரம்பி வழிய ஆசீர்வதிப்பார். பரலோகத்தின் உச்சிதங்களினால் உன்னை போஷிப்பார்.

கர்த்தர் ஆலயத்திலே ஆசாரியர்களைத் தெரிந்துகொண்டதின் நோக்கம் என்ன தெரியுமா? தம்முடைய பிள்ளைகளுக்கு ஒவ்வொரு நன்மைகளும் வரவேண்டுமென்று அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். கர்த்தருடைய ஆலயத்திலே ஜனங்களை பார்த்து ஆசாரியர்கள் சொல்லவேண்டியவற்றை கர்த்தர்தாமே விளக்கினார்.

''கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்

கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்கு சமாதானம் கட்டளையிடக்கடவர்'' என்று சொல்லி ஆசீர்வதிக்க வேண்டும் (எண் 6:24-26).

இப்பொழுது நம்முடைய சபை ஆராதனைகளிலே பாருங்கள். முடிவிலே போதகர்கள் ஒரு வார்த்தை சொல்லி அருமையாய் ஆசீர்வதிக்கிறார்கள். என்ன ஆசீர்வாதம் அது? இயேசுவுடைய கிருபை, பிதாவின் அன்பு, பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியம் உங்களோடுகூட என்றென்றைக்கும் இருப்பதாக என்று சொல்லி ஆசீர்வதித்து அனுப்புகிறார்கள். குமாரன் உங்களோடு இருப்பாராக. பிதா உங்களோடு இருப்பாராக. ஆவியானவர் உங்களோடு இருப்பாராக என்று ஆலயத்தைவிட்டு வெளியே வரும்போது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டவர்களாய் திரும்புகிறோம்.

கர்த்தர் நம்மை பல விதங்களிலே ஆலயத்திலே ஆசீர்வதிக்கிறார், ஆரம்ப ஜெபம் ஒரு ஆசீர்வாதம், சாட்சியின் ஆசீர்வாதம், பிரசங்கங்களின் ஆசீர்வாதம். எல்லாம் ஆசீர்வாதமாய் இருக்கிறது.

மட்டுமல்ல, நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்படி நம்முடைய காணிக்கைகளை கர்த்தருடைய சமுகத்திலே அர்ப்பணித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம்.

ஒரு ஏழை விதவை இரண்டு காசுகள் மாத்திரமே காணிக்கையாக கொண்டுவந்திருந்தாள். கர்த்தர் அதைப் பார்த்தார். வெறும் காசுகளைத்தான் பார்த்தாரா? இல்லை. அவளுடைய இருதயத்தைப் பார்த்தார். அவளுடைய ஜீவனத்துக்கிருந்த எல்லாவற்றையும் அவள் போட்டுவிட்டதைக் கர்த்தர் கவனித்தார்.

மற்றவர்கள் எல்லாம் நூறு ரூபாய் நோட்டையோ அல்லது தங்க காசுகளை அல்லது வெள்ளி காசுகளை போட்

டுக்கொண்டிருந்ததைப்பார்க்கிலும் அவள் கர்த்தர்மேல் அன்பு வைத்து முழுமையும் கர்த்தருக்கென்று கொடுத்து விட்டாள்.

கர்த்தர் நிச்சயமாகவே அவளை ஆயிரம் மடங்கு ஆசீர்வதித்திருப்பார் என்று நான் நம்புகிறேன். ஒரு சாறிபாத் விதவை கொஞ்சம் மாவையும், எண்ணெயையும் கர்த்தருடைய ஊழியருக்கு என்று கொடுத்தபோது கர்த்தர் அதை கவனித்திருந்து பஞ்ச காலம் எல்லாம் பானையில் மா செலவழிந்து போகாமலும், எண்ணெய் தீர்ந்து போகாமலும் இருக்க உதவி செய்தார் அல்லவா?

அதைப்போலவே அருமையான தேவனுடைய பிள்ளையே, கர்த்தருடைய சமுகத்திற்கு காணிக்கைகளையும் தசம பாகங்களையும் கொண்டுவரும்போது கர்த்தர் வானத்தின் பலகணிகளை உனக்கு திறப்பார். இடங் கொள்ளாமற் போகுமட்டும் உன்னை ஆசீர்வதிப்பார். என்னை சோதித்து வேண்டுமென்றாலும் பாருங்களேன் என்று கர்த்தர் சொல்கிறதை நீங்கள் மல்கியாவில் வாசிக்கலாம். ஆலயத்தின் சம்பூரணத்தினால் நிரப்பப்படும்படி ஆலயத்திற்கு வாருங்கள்.

ஆலயத்திற்கு வருவது உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியின் அநுபவமாய் இருக்கட்டும். தாவீதுக்கு அது மகிழ்ச்சியாய் இருந்தது என்று வேதம் சொல்லுகிறது அல்லவா?

சிலர் ஆலயத்திற்கு வருவார்கள். பிரசங்க நேரம் வந்தால் போதும் வேப்பங் காயை சாப்பிடுவதைப் போல முகத்தை சுளித்துக்கொள்வார்கள். எட்டிக் காயின் கசப்பைப் போல உணருகிறார்கள். விளக்கெண்ணெயைக் குடிப்பதைப்போல காணப்படுகிறார்கள்.

ஆனால் ஆலயத்தின் சம்பூரணத்தினால் நிரப்பப்பட விரும்பின தாவீதின் உள்ளத்தில் ஆனந்த பரவசம் ஏற்பட்டது. அந்த ஆனந்த பரவசத்தின் காரணம் என்ன?

ஆலயத்திலே ஆண்டவரை நான் சந்திப்பேன். ஆண்டவர் ஆலோசனை தருவார். என்னுடைய குறைகளையெல்லாம் நிறைவாக்குவார், என்னை ஆசீர்வதிப்பார் ஆலயத்திற்கு போவோம் வாருங்கள் என்று அவர்கள் சொன்ன உடனே நிறைவான ஆழமான ஆசீர்வாதங்களை தாம் பெறப் போகிற மகிழ்ச்சி தாவீதின் உள்ளத்தையெல்லாம் பொங்கி வழியச் செய்தது.

தாவீது தேவ ஜனங்களோடு சேர்ந்து நடக்கும்போது அங்கே இஸ்ரவேலுக்கு சாட்சியாக கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்தரிப்பதற்கு போகும் என்று குறிப்பிடுகிறார் (சங் 122:4). தேவபிள்ளையே, சகோதர ஐக்கியத்தினால் நீ நிரப்பப்படும் போது ஆலயத்தின் ஆசீர்வாதங்கள் இன்னும் பன்மடங்கு அதிகமாய் இருக்கும். ஆமென், அல்லேலூயா!

அத்தியாயம் 7

ஆலயமும் பிரச்சனைகளின் தீர்வும்!

கர்த்தருடைய ஆலயத்திற்கு நாம் ஏன் வருகிறோம்? ஆலயத்திற்கு வரும்போது அங்கே நாம் பெற்றுக்கொள்ளுகிற ஆசீர்வாதம் என்ன?

ஆம், ஆலயத்தில் கர்ந்தர் நம்மை சந்திக்கிறார். அங்கே நம்முடைய பாரங்களையெல்லாம் கர்த்தருடைய சமுகத்திலே இறக்கி வைக்கிறோம். கர்த்தர் நம்முடைய குறைவுகளையெல்லாம் அங்கே நிறைவாக்குவார்.

அதற்கு ஒரு நல்ல உதாரணத்தை கொடுக்க வேண்டுமென்றால் அன்னாளின் வாழ்க்கையை உங்கள் முன்பாக வைக்க விரும்புகிறேன். பாருங்கள், அவளுடைய வாழ்க்யில் எத்தனை பிரச்சனை! பிள்ளையில்லாத வேதனை ஒரு பக்கம். அவளுடைய சக்களத்தி நாள்தோறும் கேலியும் பரியாசமுமாய் அவளை பேசும் வார்த்தைகள் இன்னொரு பக்கம் அவை வெந்த புண்ணில் வேலை பாய்ச்சினதைப் போல அவளை மனமடிவாக்கியிருந்திருக்கும்

அன்னாள் தன்னுடைய பிரச்சனைக்கு தீர்வு காண ஆண்டவரை எங்கே சந்திக்கலாம் என்று எண்ணியபோது அவளுடைய உள்ளம் தேவாலயத்தையே நாடியது. அவள் தனிமையில் தேவாலயத்தை நோக்கி ஓடினாள். அங்கே தன்னுடைய பாரங்களையெல்லாம் இறக்கி வைக்க தீர்மானித்தாள்.

நாம் ஆராதிக்கிற நம்முடைய கர்த்தர் நம்முடைய குறைவுகளையெல்லாம் நிறைவாக்குகிறவர். பிலிப் 4:19-லே வாசித்துப் பாருங்கள். ''தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்'' என்று வேதம் வாக்களிக்கிறது.

குறைவுகளை நிறைவாக்கும் ஆண்டவரை கர்த்தருடைய ஆலயத்திலே சந்திக்க அன்னாள் தீர்மானித்தாள்.

தேவாலயத்திற்கு வந்த அன்னாள் மற்றவர்கள் தன்னை கவனிக்கிறார்கள் என்பதைப் பற்றி கவலைப்படவில்லை. தான் உண்டு; கர்த்தர் உண்டு! கர்த்தருடைய பாதத்தில் தன்னுடைய பிரச்சனைகளை எப்படியாவது கொட்டி தீர்த்துவிட வேண்டுமென்று அவள் தீர்மானித்து அங்கே மனங்கசந்து அழுது ஜெபித்தாள் கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டார். ஆலயத்தில் ஏறெடுக்கப்படும் ஒவ்வொரு ஜெபத்திற்கும் கர்த்தருடைய கண்கள் திறந்தவைகளும் செவிகள் கவனிக்கிறவைகளுமாய் இருக்கும் என்று வாக்களித்திருக்கிறார் அல்லவா? அந்த வாக்கை நிறைவேற்ற சித்தமானார்.

அன்னாள் கேட்டது ஒரே ஒரு குழந்தையைத்தான். ஆனால் கர்த்தரோ அவளுக்கு ஆசீர்வாதமான சாமுவேலை கொடுத்தது மாத்திரமல்ல, இன்னும் ஐந்து பிள்ளைகளை கொடுப்பதற்கு அவர் வல்லமையுள்ளவராகவே இருந்தார். அல்லேலூயா!

நம் கர்த்தர் நாம் வேண்டிக்கொள்ளுகிறதை மாத்திரம் தருகிறவர் அல்ல; அதற்கு மேலாகவும் நம்மை ஆசீர்வதிக்கிறவர்! நாம் நினைக்கிறதற்கும் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் அதிகமாக கிரியை செய்ய வல்லமையுள்ளவர்.

தேவபிள்ளையே, உன் வாழ்க்கையில் பிரச்சனையோடு நின்றுகொண்டிருக்கிறாயா? ஐயோ, என்னுடைய குறைகளை யாரிடத்தில் சொல்வது? யாரிடத்தில் போய் என்னுடைய மனக் கஷ்டங்களையெல்லாம் பகிர்ந்துகொள்கிறது என்று கலங்குகிறாயா?

கர்த்தருடைய ஆலயத்திற்கு செல்லும்போதெல்லாம் கர்த்தரை நேரில் சந்தித்து அவரோடு மனந்திறந்து பேசு

வாயாக. சொந்த தகப்பனிடத்தில் உள்ளத்தை திறந்து பேசுவது இல்லையா? சொந்த தகப்பனிடத்தில் தேவைகளை யெல்லாம் மனம்விட்டு பகிர்ந்துகொள்வது இல்லையா? அப்படியே பரம பிதாவினிடத்திலும் மனந்திறந்து பேசுங்கள். உங்களுடைய குறைவை நீக்க வல்லமையுள்ளவர் உங்கள் மத்தியிலும் அசைவாடிக்கொண்டிருக்கிறார். அவருடைய கண்கள் உங்களைக் காண்கிறது.

கர்த்தர் ஒரு முறை தேவாலயத்திற்கு வந்தபோது அங்கே கூனியாயிருந்த ஒரு சகோதரியைச் சந்தித்தார். கூனிக் குறுகி நிலத்தையே பார்த்துக்கொண்டு சாத்தானால் கட்டப்பட்டிருந்த ஆபிரகாமுடைய குமாரத்தியை கர்த்தர் கண்டபோது, உடனே அவளுடைய குறைகளை நிறைவாக்க சித்தமானார்.

கர்த்தருடைய வார்த்தை அவளை விடுதலையாக்கிற்று. கட்டுகள் அறுந்துபோயின; கட்டி வைத்திருந்த சாத்தான் புறமுதுகு காட்டி ஓடினான். நிமிர முடியாமல் இருந்த அவள் நிமிர்ந்தாள். பலவீனப்படுத்துகிற ஆவி நீங்கினதினால் அவள் பெலன் கொண்டாள். ஆலயத்தில் அற்புதத்தைப் பாருங்கள்!

கிறிஸ்து அநேக அற்புதங்களை கர்த்தருடைய ஆலயத்திலே செய்தார் என்பதை வேதத்தில் வாசிக்கலாம். ஆலயம் கர்த்தருடைய அற்புதத்தை பெற்றுக்கொள்ளுகிற ஒருஅருமையான இடம்.

ஆண்டவர் மாத்திரமல்ல, பேதுருவும் யோவானும் கூட ஆலயத்திற்கு வரும் வழியில் அற்புதத்தை செய்தார்கள் என்பதை நாம் அறியலாம். ஒரு முறை பேதுருவும் யோவானும் ஆலயத்திற்கு வந்தபோது ஆலயத்தின் வாசலினருகே அலங்கார வாசலின் சமீபமாய் உட்கார்ந்திருந்த பிறவி சப்பாணியை பார்த்தார்கள்.

பெரிய ஐசுவரிய சம்பன்னரான கர்த்தருடைய வாசற்படியின் அருகே பிச்சைக்காரனாய், சரீர பெலனற்றவனாய்,

கால்கள் நிற்க முடியாத சப்பாணியாய் உட்கார்ந்திருக்கிற அந்த ஏழை மனிதனை நோக்கிப் பாருங்கள். ஆலயத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியாமல் வெளியே உட்கார்ந்திருக்கிறதை பாருங்கள். எத்தனையோ பேருக்கு அற்புதங்கள் நடந்த இடத்தில் அவனுக்கு அற்புதம் நடக்கவில்லை.

பேதுருவும் யோவானும் அவனுடைய கைகளைப் பிடித்து, நசரேயனாகிய இயேசுவின் நாமத்தினால் எழுந்து நடப்பாயாக என்று சொன்னபோது அவன் பெலன் கொண்டான்.

அவன் அற்புதமாய் சுகமாக்கப்பட்டபோது செய்த முதல் காரியம் என்ன தெரியுமா? "அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்" (அப் 3:8).

அற்புதம் தேவாலயத்திற்கு உள்ளும் நடக்கிறது. தேவாலயத்திற்கு வெளியேயும் நடக்கிறது. அநேகர் அற்புதங்களை பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் நன்றி செலுத்த தேவனுடைய ஆலயத்திற்குள் வருவதில்லை. கர்த்தரைப் புகழ்ந்து பாடவும் தேவனுடைய பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ளவும் தேவ சபைக்கு வருவதில்லை. அற்புதம் மாத்திரம் போதும். கர்த்தர் வேண்டாம் என்று போய்விடுகிறார்கள்.

ஆனால் இந்த பிறவி சப்பாணியைப் பாருங்கள். அவன் நன்றி மறந்தவன் அல்ல. அவன் தேவனை துதித்துக்கொண்டே தேவனுடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான். தேவபிள்ளையே, உன்னுடைய வாழ்க்கையிலும் அவர் அற்புதத்தை செய்வார். சபைகூடுதலை ஒருபோதும் அசட்டை செய்யாதே. கர்த்தருடைய வருகை நெருங்கியிருக்கிற இந்த நாட்களிலே தேவனுடைய பிள்ளைகளோடு இணைந்து கர்த்தரைத் துதிப்பாயாக!

அத்தியாயம் 8

கர்த்தருடைய குடும்பம்!

தேவனுடைய ஆலயம் என்பது கர்த்தருடைய குடும்பமாய் இருக்கிறது. நாம் கிறிஸ்துவண்டை வரும்போது ஒருவேளை அனாதையைப்போல வந்திருக்கலாம். அன்புக்காக ஏங்கி வந்திருக்கலாம் அல்லது கொடூரமான நோயினால் மனம் நொந்து சுகமடைய வந்திருக்கலாம். இந்த வேளைகளிலெல்லாம் கர்த்தர் தகப்பனைப்போல அரவணைத்து அன்பு செலுத்தி தேற்றி உற்சாகப்படுத்துகிறார். தாயைப்போல கூட இருந்து ஆறுதல்படுத்துகிறார். சொந்த சகோதரனைப்போல பாசம் காட்டுகிறார்.

திருச்சபை என்றால் கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் கழுவப்பட்ட தேவபிள்ளைகளின் ஐக்கியமாகும். ஒருவன் திருச்சபைக்குள் வருகிறான் என்றால் அவன் காணப்படாத ஆலயமாகிய சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேர் எழுதப்பட்டிருக்கிற சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், பூரணமாக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவியினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரான கிறிஸ்துவினிடத்திற்கும் வந்து சேருகிறான்! இது எத்தனை பாக்கியம்!

(எபி 12:22-24).

இனி அவன் அனாதை அல்ல. திக்கற்றவன் அல்ல. கர்த்தருடைய குடும்பத்தில் ஒருவனானவன். பரிசுத்தவான்களோடுகூட ஒரே வீட்டாரானவன். சற்று அதை சிந்தித்துப் பாருங்கள்!

1. தேவனுடைய வீட்டார்:-

திருச்சபையிலே சேருகிற ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் "தேவனுடைய வீட்டார்" ஆவார்! நீங்கள்

இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது (எபே 2:19-22).

இந்த வசனத்தை திரும்பத் திரும்ப வாசித்துப் பாருங்கள் இது எத்தனை மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறது! இனி நீங்கள் அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடு ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறீர்கள்.

ஆலயத்திற்குள் வரும்போது எத்தனை மகிழ்ச்சி! அங்கே தேவனுடைய பிள்ளைகளையெல்லாம் சந்திக்கிறோம். சகோதரர்களையெல்லாம் சந்திக்கிறோம். நம் உள்ளம் பரவசமடைகிறது. தேவனுடையவீடு இனிமையான ஐக்கியத்தைத் தருகிறது.

பல வேளைகளிலே சபை போதகர்கள் நம்மை விசாரிக்கிறார்கள். எப்படி இருக்கிறீர்கள்? உங்களுக்கு வேலை கிடைத்ததா? வீட்டில் உள்ளவர்கள் நன்றாய் இருக்கிறார்களா? வியாதியைக்குறித்து கவலைப்பட வேண்டாம். ஜெபிப்போம், கர்த்தர் உதவி செய்வார், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார் என்றெல்லாம் சொல்லி நம்மைத் தேற்றுகிறார்கள்.

பல வீடுகளில் நடக்கும் ஜெபக் கூட்டங்களில் சென்று ஜெபிக்கும்போது பரிசுத்தவான்களுடன் நாமும் ஒரே வீட்டாராய் இருப்பது நம்முடைய இருதயத்தை மகிழ்விக்கிறது

நாம் அனாதைகள் அல்ல. வானத்தின் கீழாய் திறந்துவிடப்பட்டவர்கள் அல்ல. திக்கற்றவர்கள் அல்ல. நாம்

தேவனுடைய வீட்டைச் சேர்ந்தவர்கள் ஆயிரம் பதினு யிரமான தேவதூதர்கள் நம்முடைய பரம பிதாவின் வீட்டில் இருக்கிறார்கள். அவர்கள் நம்மை ஆற்றித் தேற்றி அரவணைக்கிறார்கள்.

தேவனுடைய பிள்ளையே, திரும்பத் திரும்ப சொல்லு வாயாக ''நான் பரிசுத்தவான்களோடுகூட ஒரே நகரத்தா ராய் இருக்கிறேன். நான் தேவனுடைய வீட்டை சேர்ந்த வனாய் இருக்கிறேன் என் குடும்பம் பரலோக குடும்பம். என் அப்பா இயேசு ராஜா. பலமிக்க தேவதூதர்களை என் னுடைய வீட்டு வேலைக்காரர்களாக அவர் எனக்குத் தந் திருக்கிறார். என் குடும்பம் பூமியிலும் வானத்திலும் நிரம் பிக் கிடக்கிறது.'' உங்களுடைய உள்ளம் பரவசமடையட் டும்.

2 சுயரத்தத்தினால் சம்பாதித்த சபை:-

கர்த்தர் எப்படி இந்த சபையை உருவாக்கினார்? எப் படி ஆலயத்தை உருவாக்கினார்? தன்னுடைய சுயரத்தத் தைக் கொடுத்து அதை வாங்கினார் என்று அப் 20:28-ல் நாம் வாசிக்கிறோம்.

கர்த்தருடைய ஆலயத்திற்குள் நுழையும்போதெல்லாம் கர்த்தர் நம்மை தம்முடைய சுயரத்தத்தைக் கொடுத்து வாங்கின அந்த தியாகம் நம்முடைய மனக்கண்களுக்கு முன்பாக வரட்டும். அந்த கல்வாரி சிலுவையை நோக்கிப் பார்க்கட்டும். அந்த இரத்தத்தின் புண்ணியத்தினாலே கர்த் தருடைய சபையின் அங்கத்தினராக இழுக்கப்பட்டோம்.

சபை மக்களை கிறிஸ்து தம் உயிரைப் பார்க்கிலும் அதிகமாய் நேசிக்கிறார். நமக்காக ஜீவனைக் கொடுத்தவர், நமக்காக இரத்தம் சிந்தினவர் நம்மைக் குறித்து அக்கறை யில்லாமல் இருப்பாரோ?

வேதம் சொல்கிறது: ''நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவரு

டைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்'' (எபே 5:30).

அப்படி நமக்கு சுயரத்தத்தினாலே கர்த்தர் சபையை சம்பாதித்தபடியினாலே வேதம் சொல்லுகிறது, அவர் சபையை போஷித்து காப்பாற்றுகிறார் (எபே 5:29).

தேவபிள்ளையே, சபையின் அங்கத்தினரான உன்னை அவர் போஷித்து காப்பார். உன்மேல் எப்பொழுதும் நோக்கமுடையவராய் இருப்பார் நாம் அவருடைய எலும்பிற்கும், மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் பங்குள்ளவர்கள் என்பதை ஒருபோதும் மறந்துபோய்விடக் கூடாது. கர்த்தருடைய ஆலயத்திற்குள் நுழையும்போதெல்லாம் அவர் சிந்தனை நம்முடைய உள்ளத்தை உருக்கட்டும். நம்முடைய கண்களில் கண்ணீர்த்துளிகளை பெருக்கட்டும்.

இந்த உலகத்தின் பிடியிலிருந்து சபையை மீட்டுக் கொண்டு வருவதற்காக அவர் செய்த தியாகங்களை எப்போதும் நினைவுகூருவாயாக! அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே தம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (கலா 1:4).

பரலோகத்தில் பேர் எழுதப்பட்டிருக்கிற சர்வ சங்கமாகிய சபையிலே உன்னை அங்கத்தினராக சேர்த்துக் கொள்ள அவர் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்.

என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்று அப்போஸ்தலனாகிய பவுல் உணர்ந்து உருகி சொல்லுகிறதைப் பாருங்கள் (கலா 2:20).

உனக்காக தம்மைத்தாமே முற்றிலுமாக ஒப்புக் கொடுத்த இயேசுகிறிஸ்துவுக்கு உன்மேல் நிச்சயமாகவே ஒரு நோக்கம் உண்டு. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே 5: 27).

3. கிறிஸ்துவோடு இணைத்துக்கொண்டார்:-

முதலாவது, அவர் நம்மை தம்முடைய வீட்டாராக்கினார். இரண்டாவது,தேவ சபையாக மீட்டுக்கொண்டார். மூன்றாவதாக, தேலன் தம்மோடுகூட இணைத்துக் கொள்ளுகிறார்.

ஒரு திராட்சச்செடியைப் பாருங்கள். அதிலே ஆயிரமாயிரமான கிளைகள் இருக்கிறது. இந்த கிளைகளெல்லாம் அந்த பெரிய திராட்சச் செடியோடுகூட இணைக்கப் பட்டு இருக்கிறது. திராட்சச்செடியின் சாறு, திராட்சச் செடியின் குணாதிசயங்கள், இனிமைகள் எல்லாம் அந்த செடியிலிருந்து எல்லா கிளைகளுக்கும் பாய்ந்து செல்லுகிறது.

கிறிஸ்துவாகிய சபையிலே நாம் ஆயிரமாயிரமான கொடிகளாய் இருந்தாலும் கிறிஸ்துவோடுகூட ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறோம். இயேசு சொன்னார்: நான் மெய்யான திராட்சச் செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் (யோவான் 15:1,5).

அருமையான தேவனுடைய பிள்ளையே, ஆலயத்திற்கு சென்று கிறிஸ்துவை தொழுதுகொள்ளுகிறது ஏதோ வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மாத்திரமுள்ள ஒரு அனுபவம் அல்ல. ஒவ்வொரு வினாடியும் கிறிஸ்துவோடு கூட இணைந்திருக்கிற மேன்மையான ஒரு அனுபவமாகும்.

அப்படி இணைந்து நாம் ஜீவிக்கும்போதுதான் கிறிஸ்துவினுடைய பரிசுத்தம் நமக்குள்ளே வருகிறது; கிறிஸ்துவின் ஜீவன் நமக்குள்ளே வருகிறது; ஆவியின் வரங்களும் வல்லமைகளும் நமக்குள்ளே வருகிறது.

நாம் யாருக்கு கிளையாக இருக்கிறோம்? நாம் கிறிஸ்துவோடுகூட மாத்திரம் இணைக்கப்பட்டு இருக்கவில்லை. மற்ற ஆயிரக்கணக்கான கொடிகளோடு கூடவும் நாம் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்துபோய் விடக்கூடாது.

இன்றுசபைப்பிரிவுகள் ஆயிரக்கணக்காய் இருக்கலாம். ஒவ்வொரு சபையிலும் கர்த்தருடைய உண்மையான தேவனுடைய பிள்ளைகள் இருக்கிறார்கள். பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். சபைகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு ஒன்றையொன்று பகைத்துக்கொண்டிருக்கலாம்.

ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய உள்ளத்திலே பகை உணர்வு இருக்கக்கூடாது. தேவ ஆவியினாலும், கல்வாரி இரத்தத்தினாலும் நாம் உலகமெங்கும் இருக்கிற ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளோடும் இணைக்கப்பட்டிருக்கிறோம்.

ஒரு நாள் கர்த்தர் வரும்போது உலகமெங்கும் பரந்து விரிந்து கிடக்கிற கர்த்தருடைய பிள்ளைகளெல்லாம் ஒரே சபையாகி ஒன்றுபோல எழும்பி கர்த்தருக்கு எதிர் செல்லுவோம். அப்பொழுதுதான் கர்த்தருடைய குடும்பம் எவ்வளவு பெரியது என்பதை நாம் அறிந்துகொள்ளுவோம். கர்த்தரின் குடும்பம் பெரியது, இன்பமானது, இனிமையானது, மகிழ்ச்சியானது. ஆமென், அல்லேலூயா!

ஆலயம் கட்டப்பட வேண்டும்!

''நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்''
(ஆகாய் 1:8).

ஆலயத்தை கட்டுங்கள் என்பது கர்த்தருடைய ஒரு ஆலோசனையாய் இருக்கிறது. ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் கர்த்தருடைய ஆலயத்தை கட்ட வேண்டும்

ஆலயத்தை கட்டுவதற்கு விசேஷமாக நான்கு முக்கிய காரியங்கள் தேவைப்படுகிறது. முதலாவது ஆலயம் கட்டுவதற்கான ஒரு இடம். இரண்டாவது அதற்கான பிளான். மூன்றுவது அதை கட்டுவதற்கான பண வசதி நான்காவதாக அந்த ஆலயத்தை நிர்ணயிக்கக் கூடிய ஒழுங்கு விதிமுறைச் சட்டம்.

இந்த நான்கும் இல்லாவிட்டால் ஒரு ஆலயத்தை கட்டி எழுப்பிவிட முடியாது. அது உலகப்பிரகாரமான தேவாலயமாய் இருந்தாலும் சரி, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையான ஆலயமாய் இருந்தாலும் சரி, இந்த நான்கும் அவசியம்!

பழைய ஏற்பாட்டிலே இஸ்ரவேல் ஜனங்கள் ஆலயம் கட்டியது புதிய ஏற்பாட்டிலே நம்முடைய ஜீவியமாகிய ஆலயத்தை கட்டுவதற்கு நிழலாட்டமாய் இருக்கிறது. பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைத்து நாம் சிந்திக்கும்போது அநேக ஆவிக்குரிய இரகசியங்களை நாம் அறிந்துகொள்ள இயலும்.

1. ஆலயம் கட்டப்படும் இடம்:-

''பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும்

மலையில் எபூசியனாகிய ஓர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத் துவக்கினான்'' (II நாளா 3:1).

ஆலயம் கட்டப்படுவதற்கு பூமியிலுள்ள எல்லா இடங்களிலும் கர்த்தர் ஒரு இடத்தை முன்குறித்தார். அதை பரிசுத்தப்படுத்தினார். அதை விசேஷமுள்ளதாய் மாற்றினார். அதுதான் மோரியா மலையில் தாவீதுக்கு காண்பிக்கப்பட்ட ஒரு இடம்.

மோரியா மலை என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். கர்த்தர் அங்கேதான் ஆபிரகாம் தன்னுடைய மகனை பலி செலுத்துவதற்காக அழைத்துக்கொண்டு போனார். அந்த இடத்தையும்கூட கர்த்தர் முன்குறிக்க சித்தமானார். ''நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்'' (ஆதி 22:2).

கர்த்தர் குறித்த இடம் அது. அந்த இடத்தில்தான் ஈசாக்கு அடுக்கப்பட்ட கட்டைகளின்மேல் கிடத்தப்பட்டான். அந்த இடத்தில்தான் ஆபிரகாம் தன் கையை நீட்டி கத்தியை எடுத்து தன் குமாரன் என்றும் பாராமல் பலி செலுத்த கையை ஓங்கினார். அந்த இடத்தில்தான் கர்த்தர் வானத்திலிருந்து ஆபிரகாமே என்று கூப்பிட்டார். அந்த இடத்தின் அருகேதான் இதோ ஒரு ஆட்டுக்கடா தன் கொம்புகளை புதரிலே சிக்க வைத்துக் கொண்டிருந்தது. அந்த இடத்தில்தான் ஆபிரகாம் கர்த்தருக்கு ''யெகோவா யீரே'' என்ற பெயரையிட்டார்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, ஒரு இடத்தை கர்த்தர் முன்குறித்து முன்தெரிந்துகொண்டு அந்த இடத்திலே ஆலயம் கட்டப்பட வேண்டுமென்று விரும்பியதை போலவே கர்த்தர் நம்மையும் முன் குறித்து, முன்தெரிந்து கொண்டார். நாம் அவருடைய ஆலயமாய் விளங்க வேண்டுமென்று தீர்மானித்தார். உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே அவர் முன் அறிந்து அழைத்தார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுவதைப் பாருங்கள்.

"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறுனவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறுர்; எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறுர்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறுர்; எவர்களை நீதிமான்களாக்கினுரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறுர்"

(ரோமர் 8:29,30).

அந்த இடம் தேவனுல் முன்குறிக்கப்பட்ட ஒரு இடமாய் இருந்தது. மாத்திரமல்ல, அந்த இடத்திற்கு விலைக்கிரயம் செலுத்தப்பட்டு வாங்க வேண்டிய இடமாகவும் இருந்தது! எபூசியன் என்பவனுக்கு சொந்தமானதாய் இருந்த அந்த இடத்தை தாவீது அபகரித்துக்கொள்ள விருப்பப்படவில்லை, வேதம் சொல்லுகிறது, "தாவீது அந்த நிலத்திற்கு அறுநூறு சேக்கல் நிறைபொன்னை ஓர்ணுனுக்குக் கொடுத்து, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினுன்" (I நாளா 21:25).

நம்முடைய ஆத்தும மீட்பை ஒரு சிறிய காரியமாக நாம் எண்ணலாம். ஆனுல் கர்த்தரோ அதற்கு ஒரு பெரிய விலைக்கிரயத்தை கொடுக்க முன்வந்தார். நம்முடைய ஆத்துமாவுக்கு ஆண்டவர் கொடுக்க முன்வந்த அந்த விலைக்கிரயம் என்ன தெரியுமா? ஏதோ நூறு சேக்கல் பொன்னே அல்லது அறுநூறு சேக்கல் பொன்னே அல்ல. அது அநேகருக்கு முன்பாக ஒரு எளிய காரியமாய் இருந்திருக்கும் ஏனென்றுல் பொன்னும் வெள்ளியும் அவருடையது. வானுதி வானங்களை உண்டுபண்ணின ஆண்டவர் அவற்றையெல்லாம் எளிதாய் கொடுத்துவிட முடியும்.

ஆனுல் கர்த்தரோ தன்னுடைய சொந்த இரத்தத்தையே சொந்த ஜீவனையே விலைக்கிரயமாய் கொடுக்க சித்தமானுர். அப்போஸ்தலனுகிய பேதுரு சொல்லுகிறுர்:

''குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து வின் விலேயேறப்பெற்ற இரத்தத்தினுலே மீட்கப்பட்டீர் களென்று அறிந்திருக்கிறீர்களே'' (1பேது 1:19).

அப்போஸ்தலனுகிய பவுல் சொல்லுகிருர்: ''கிரயத் துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்திஞலும் உங்கள் ஆவி யினுலும் தேவனே மகிமைப்படுத்துங்கள்'' (1கொரி 6:20).

தேவபிள்ளேயே, நீ கிரயத்துக்கு கொள்ளப்பட்டவன் என்பதை மறந்து போகாதே! அந்த விலேக்கிரயம் செலுத் தின கிறிஸ்துவை கல்வாரி சிலுவையிலே நோக்கிப்பார்! உனக்காக விலேக்கிரயம் செலுத்தப்பட்ட தேவ குமார னின் தியாகத்தை நோக்கிப் பார்! உனக்காக கைகளிலே கால்களிலே ஆணிகள் கடாவப்பட்ட அவருடைய பாடு களே சிந்தித்துப்பார்!

''அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங் களேப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலி யாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களே முன்னிட்டு உங்களே வேண்டிக்கொள்ளு கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனே'' (ரோம 12:1).

2. கட்டிட பிளான்:-

ஆலயத்திற்கென்று நிலம் வாங்கிவிட்ட பின்பு அதை கட்டுவதற்கென்று பிளானும் தேவை. கர்த்தர் ஒவ்வொன் றையும் ஒரு அநாதி தீர்மானத்தின்படி, திட்டத்தின் படியே நிறைவேற்றுகிறவராய் இருக்கிருர். அவர் ஒன்றை யும் ஏனே தானே என்று செய்வதில்லே. எல்லாவற்றையும் திட்டமிட்டு எல்லாவற்றையும் முன்குறித்து தம்முடைய அநாதி ஞானத்தின் பேரிலேயே நிறைவேற்றுகிறவராய் இருக்கிருர்.

ஒரு ஆசரிப்புக் கூடாரம் கட்டுவதைக் குறித்து மோசே யோடுகூட தெளிவாய் மாதிரியை காண்பித்து விளக்

கிறார். யாத் 25:40-யை வாசித்துப் பாருங்கள். ''மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு'' என்று ஆண்டவர் நமக்கு கொடுக்கிற ஆலயத்திற்கு மாடலை தெரிவித்தார்.

அதுபோலவே தாவீது கர்த்தருக்கென்று ஆலயத்தை கட்ட நினைத்தபோது அதற்கான வரைபடத்தை கர்த்தர் தாமே தம்முடைய சொந்த கைப்பட எழுதி அவனுடைய கையிலே கொடுத்தார். ''இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றான்'' (I நாளா 28:19).

கர்த்தர் தம்முடைய ஆலயத்தின் வரைபடத்தை தம்முடைய சொந்த கையினாலேயே எழுதிக்கொடுக்க தீர்மானித்ததை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அந்த ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலம் எங்கே இருக்க வேண்டும்? மகா பரிசுத்த ஸ்தலம் எங்கே இருக்கவேண்டும்? வெளிபிரகாரம் எங்கே இருக்க வேண்டும்? ஆசாரியர்கள் எந்த பக்கம் பணியாற்ற வேண்டும் என்பதையெல்லாம் திட்டமும் தெளிவுமாக கர்த்தர் விளக்கிக் கொடுத்தார்.

சாதாரணமாக நாம் ஒரு வீடு கட்டுவோமென்றால் முனிசிபாலிடமோ அல்லது கார்ப்பரேசனிலோ வீடு கட்டும் பிளானை நாம் முதலில் வரைந்துகொடுத்து அதற்கு அனுமதி கிடைத்த பிறகுதான் அந்த வீட்டை நாம் கட்ட முடியும். திடீரென்று யாராலும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் ஒரு கட்டிடத்தை கட்டிவிட இயலாது. அதற்கு பிளான் மிகவும் அவசியம்.

இன்று நாம் கர்த்தருடைய ஆலமாய் இருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையும் ஆவிக்குரிய ஜீவியத்தையும்

கர்த்தருடைய பிளானின்படியே கட்டப்பட வேண்டும். அதற்காகதான் கர்த்தர் வேத புத்தகத்தையே தம்முடைய பிளானாக நம்முடைய கையில் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் வாழ்க்கையை வரைபடமாக்கி நம்முடைய கையிலே தந்திருக்கிறார்

அப் பேதுரு இதைக்குறித்து சொல்லுகிறார், "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்"

(I பேதுரு 2:21).

கர்த்தருடைய பிளானின்படி நாம் கட்டப்படுவோமாக! வேதம் சொல்லுகிறது. "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது"

(எபே 2:20,21).

தேவபிள்ளையே, கிறிஸ்துவின்மேல் நீ இசைவாய் இணைக்கப்பட்டு பரிசுத்த ஆலயமாய் கட்டப்பட்டு எழுப்பப்பட கர்த்தருக்கு உன்னை பரிபூரணமாக ஒப்புக்கொடுப்பாயா!

3. ஆலயம் கட்டுவதற்கு பொருள் தேவை:-

ஆலயம்கட்ட இடம் கிடைத்தது. பிளானை கர்த்தர் கொடுத்துவிட்டார். இனிமேல் அதற்கு பொருட்கள் தேவை.

தாவீதுக்கு கர்த்தருடைய ஆலயத்தின்மேல் அளவில்லாத அன்பு இருந்தது. கேதுரு மரங்களினால் செய்யப்பட்ட அரண்மனையிலே உலாவிக்கொண்டிருக்கும்போது கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி கூடாரங்களில் இருப்பதை நினைத்து உள்ளம் பொங்கினார். கர்த்தருக்கு

ஆலயத்தை கட்டவேண்டுமென்ற வாஞ்சை அவருக்குள் பொங்கினதினாலே கர்த்தருக்கென்று திரளான வெள்ளியையும் பொன்னையும் சேகரித்தார்.

தாவீது அதைக்குறித்து சொல்லும்போது, "நான் என்னாலே இயன்றமட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன் வேலைக்குப் பொன்னையும், வெள்ளி வேலைக்கு வெள்ளியையும், வெண்கல வேலைக்கு வெண்கலத்தையும், இரும்பு வேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக் கற்களையும், விலையேறப்பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதக முதலிய கற்களையும் ஏராளமாகச் சவதரித்தேன்" (I நாளா 29:2).

புதிய ஏற்பாட்டிலே நாம் கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வர வேண்டியது என்ன? ஆம், பரிசுத்தம், விசுவாசம், தெய்வீக அன்பு, கிருபைகள், தாலந்துகள், ஜெப ஜீவியம், ஊழியம் ஆகிய எல்லாவற்றின் மூலமாகவும் கர்த்தருடைய ஆலயத்தை நாம் கட்டி எழுப்ப வேண்டும்.

அப். பவுல் தீத்துவுக்கு எழுதும்போது, "நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணவேண்டுமென்று குறிப்பிடுகிறார்" (தீத்து 2:12).

தேவபிள்ளையே, நீ கட்டும் ஆவிக்குரிய மாளிகையை செங்கல்லினாலும் சிமிண்டினாலும் கட்டப்பட்டு எழுப்பப்படுவது அல்ல. அது தியாகத்தினாலும், ஜெபத்தினாலும், பரிசுத்தத்தினாலும் கட்டப்பட்டு எழுப்புவதாகும்.

அப். பவுல் அன்போடு எழுதுகிறார். "உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (I தெச 5:23).

4. ஆலயம் கட்டப்படும் சட்ட ஒழுங்குமுறை:-

சாலொமோன் ஆலயத்தை எவ்வளவோ சட்டதிட்டத்தின்படி ஒழுங்கின்படி கட்டிமுடித்தான் என்பதைப் பாருங்கள். உதாரணமாக ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். I இராஜா 5:17-ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். "ஆலயம் கட்டப்படுகையில், அது பணி தீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது. ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள், வாச்சிகள் முதலான எந்த இரும்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை" (I இராஜா 6:7)

வெட்டி எடுக்கப்பட்ட கல் அது. கற்பாறையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே மண் ஒட்டிக் கொண்டு இருப்பதில்லை. உலக போராட்டங்கள், உலக சிநேகிதங்கள், உலக ஆசாபாசங்கள் ஒட்டிக்கொண்டு இருப்பதில்லை. அது வெட்டி எடுக்கப்பட்ட கல், வேறு பிரிக்கப்பட்ட கல், பிரதிஷ்டை செய்யப்பட்ட கல். தேவ பிள்ளையே, நீ எத்தனை ஆழமான ஆவிக்குரிய ஜீவியத்திற்கு உள்ளாய் நடக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். பாபிலோனிய மார்க்கத்தை விட்டுவெளியே வா. தேவனுடைய உபதேசத்தில் சுத்திகரிக்கப்பட்டு பணிதீர்க்கப் பட்ட கல்லாய் நீ மாறவேண்டும்.

உன்னுடைய வாழ்க்கையில் செதுக்க வேண்டியவைகளை செதுக்கி, அறுக்க வேண்டியவைகளை அறுத்து, உடைக்க வேண்டியவைகளை உடைத்து, பொடியாக்க வேண்டியவைகளைபொடியாக்கி இந்த உலகத்திலே நீ பணி தீர்க்கப்பட்டவனாய் காணப்படுவாயென்றால் நீ பரலோக மாளிகையிலே ஒளிவீசும் கல்லாய் காணப்படுவாய். தேவ பிள்ளையே, நீ கர்த்தருடைய ஆலயமாய் மாறும்போது அது எத்தனை மகிமையுள்ளதாய் இருக்கும். கர்த்தர் அதற்காக உன்னை ஆயத்தப்படுத்துவாராக!

மனம்விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலமாக உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

இந்த புத்தகமானது மறைந்த Rev Rajah D. Stephen, Salem அவர்களுடைய ஞாபகார்த்தமாக வெளியிடப்படுகிறது.

நல்ல போராட்டத்தை போராடி ஓட்டத்தை முடித்து விசுவாசத்தைக் காத்துக்கொண்டு வெற்றி வாகை சூடின வர்களில் இன்று இவரும் ஒன்றாகி விட்டார். தேவனுக்கு ஏற்ற பெருவிளைச்சலை இந்திய சுவிசேஷக ஐக்கிய சபை யின் மூலமாக பெறும்படி தன் வாழ்க்கையை அர்ப்பணித் திருந்தார்.

இந்த புத்தகத்தை வெளியிட உதாரத்துவமாகக் கொடுத்த அவருடைய மகனுக்காக தேவனை ஸ்தோத்தரிக் கிறேன்.

Rev. Samuel D. Stephen & Family, Salem -7

இந்த புத்தகத்தால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதங் களும் அவர்களையும் அவர்களுடைய அருமைக் குடும்பத் தினரையும் சேருவதாக கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப் பாராக.

இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது 50 பேருக்காவது இதை வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச்செய்யும்!

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்தும பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 150 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அநேக ஆவிக்குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம்.

J. சாம் ஜெபத்துரை M.A.,

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,

கோடம்பாக்கம், சென்னை – 600 024